பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2035 பங்குனி 03 செவ்வாய்க்கிழமை (16-03-2004) தொலைபேசி - 2223378 ஒலி 88

ராம்கோ சிமெந்து

MADRAS CEMENTS LTD


RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

# கருணாவின் சதிக்கு அமெரிக்கா பின்னணி

## யாழ். பல்கலைக் கழகத்தில் கரிகாலன் உரை

(நமது நிருபர்)



**தமிழீழ விடுதலைப் புலிகளின் கிழக்குப் பிராந்தியத் தளபதியாக இருந்த கருணா அமெரிக்காவின் கைக்கூலியாகிவிட்டார். அதன் தூண்டுதலாலேயே புலிகள் இயக்கத்திற்கும், தேசியத் தலைவருக்கும் அவர் துரோகம் இழைத்துள்ளார். அவரது துரோகத்தை மட்டு. அம்பாறை மக்கள் இப்போது உணரத் தொடங்கியுள்ளனர். எனவே, இது குறித்து தமிழ்மக்கள் இனிமேல் கலக்க மடைய வேண்டிய தேவை இல்லை.**



இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் கிழக்கு மாகாண மூத்த தளபதி கரிகாலன் யாழ். பல்கலைக் கழகக் கைலாசபதி கலையரங்கில் நேற்றைய தினம் இடம்பெற்ற சமகால அரசியல் நிலைபற்றிய கருத்தரங்கில் உரையாற்றும்போதே தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

கிழக்கில் கருணா பிரச்சினைகளைத் தோற்றுவித்த சமயம் அவருடன் நான் பல தடவைகள் பேசி அவரது நிலைப்பாட்டை சுமுகமாக மாற்றுவதற்கு முயற்சிகள் செய்திருந்தேன். ஆயினும்கூட அவர் எனது ஆலோசனைகளையோ, கருத்துக்களையோ கேட்கும் நிலையில் இருக்கவில்லை. எமது இயக்கத்திற்குள் பிரதேசவாதம் துளிர்விடக்கூடாது என்பதில் எமது தலைவர் மிகவும் உறுதியாக இருந்து வருகின்றார்.

கருணா பற்றி நாம் எமது தலைவரிடம் ஏதாவது குற்றம் குறைகள் கூறினால், அவர் அதனை ஏற்கவே மாட்டார். அந்தஅளவுக்குக் கருணா

(12ஆம் பக்கம் பார்க்க)

## சூனியப் பகுதியில் வாக்குச் சாவடி அமைப்பதற்கு இராணுவம் எதிர்ப்பு

### 25ந் திகதி முடிவு தெரியவரும்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாடுப்பகுதிகளில் உள்ள மக்கள், வாக்களிப்பதற்கான வாக்களிப்பு நிலையங்களை யுத்த சூனியப் பிரதேசத்தில் அமைப்பது தொடர்பான இறுதி முடிவு எதிர்வரும் 25ந் திகதி வெளியிடப்படும் என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

வாக்களிப்பு நிலையங்களை சூனியப்பிரதேசங்களில் அமைப்பது தொடர்பாக தேர்தல் ஆணையாளருக்கும், இராணுவ உயர் அதிகாரிகளுக்குமிடையில் நேற்று முக்கிய சந்திப்பு ஒன்று இடம் பெற்றது.

தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்ற இச் சந்திப்பில் யுத்த சூனியப்பிரதேசங்களில் கண்ணிவெடி, மற்றும் மிதிவெடிகள் என்பன அகற்றப் படாமையினால் அங்கு வாக்குச் சாவடிகளை அமைப்பது பாதுகாப்பற்றது எனவும், இராணுவக் காவலரண்களுக்கு அண்மையில் வாக்குச் சாவடிகளை அமைப்பதன் மூலம சுமுகமான முறையில் தேர்தலை நடாத்த முடியும் எனவும், இராணுவ அதிகாரிகள் தேர்தல் ஆணையாளரிடம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான ஆய்வு அறிக்கையினை எதிர்வரும் 22ந் திகதி கையளிப்பதாகவும் இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(ச)

## ஜனாதிபதி - பிரதமருடன் எரிக்சொல்ஹெய்ம் சந்திப்பு

(கொழும்பு)

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஆகியோரை தனித்தனியே சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இச்சந்திப்பு நேற்று மாலை இடம் பெற்றுள்ளது.

இச்சந்திப்புக்களின் போது, எதிர்வரும் ஏப்ரல் 2ந் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் தொடர்பாக விடுதலைப் புலிகளினதும், பொதுமக்களினதும் நிலைப்பாடுகள் குறித்தும், சமாதான முன்னெடுப்புக்களில் ஏற்பட்டுள்ள தாமதங்களினால் இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளது.

இச்சந்திப்பின் போது பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவுடன் முன்னாள் அமைச்சர்மிலிந்த மொறகொட மற்றும் பேணாட் குணதிலக ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை இச்சந்திப்புக்களை

(12ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த பிரதமர் பதவி கதிர்காமருக்காம்!

### சூசகமாகத் தெரிவிக்கிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

எதிர்வரும் ஏப்பிரல் 2ல் நடைபெறவுள்ள தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெறுமாயின் அடுத்த பிரதமராக ஊடக அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரே நியமிக்கப்படுவார் என அரசியல் வட்டாரங்களில் ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

அண்மையில் ஜனாதிபதி தனது மாளிகையில் வர்த்தக சங்கத்தினரைச் சந்தித்து பேசிய போது,தான் அடுத்த பிரதமராக சிறுபான்மை இன சமூகத்தவர் ஒருவரையே நியமிக்க விரும்புவதாகத் தெரிவித்திருந்தார். இதனைத் தொடர்ந்தே இத்தகைய ஊகங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

இதைவிட அங்கு எழுப்பப்பட்ட வினாவொன்றிற்கு பதிலளித்த ஜனாதிபதி, சிறுபான்மைச் சமூகத்தவர் ஒருவரைப் பிரதமராக்குவது இனப்பிரச்சினைத் தீர்வின் ஒருபகுதியாக அமையும என்றும் தெரிவித்துள்ளார்.

(த-6)

## தலைமறைவான சிப்பாய் நேற்றுக் கைதானார்

(யாழ்ப்பாணம்)

சக சிப்பாயைச்சுட்டுக் கொன்றுவிட்டுத் தலைமறைவாகியிருந்த இராணுவச் சிப்பாய் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

512ஆவது படையணியைச் சேர்ந்த சுமந்தகுமார என்ற சிப்பாயே கைது செய்யப்பட்டவராவார். நேற்று மாலை பதில் நீதிவான் திருநாவுக்கரசு முன்னிலையில் பிரஸ்தாப சிப்பாய் ஆஜர் செய்யப்பட்டார்.

அவரை எதிர்வரும் 29ந் திகதி வரை விளக்க மறியலில்வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

கடந்த சனிக்கிழமை இரவு ஆஸ்பத்திரி வீதியும், கோவில் வீதியும் சந்திக்கும் பகுதி காவலரணில்

(12ஆம் பக்கம் பார்க்க)



எம்தமிழ் இனமே எழுந்திருங்கள் விழித்திருங்கள்
எடுத்த கருமம் கைகூடும்வரை உழைத்திடுவோம்
தமிழினம் சுயநிர்ணய உரிமையுடன்
சுதந்திரமாய் வாழ்ந்திட

வீ.ஆனந்தசங்கரி தலைமையிலான

சுயேச்சைக்குழு - 01

திரு.வீ.ஆனந்தசங்கரி
(தலைவர், தமிழர் விடுதலைக் கூட்டணி)
இல. 4



ச.முத்துலிங்கம்
(முன்னாள் தலைவர், உடுவில் கிராமசபை)
இல. 10

(சி-7435)



நாடாளுமன்ற பொதுத் தேர்தல்–2004
எல்லாரும் எல்லாமும் பெற்று வாழ்வதை உறுதிப்படுத்த...
சுதந்திரமாகப் பேசிப்பழகும் சூழல் உருவாக...
எங்கள் தாயகத்தில் நிம்மதியாக வாழ...
எங்கள் மண்ணில் தொழில் வளம் பெருக...
மக்களே ஆணையிடுங்கள்!
வீணைக்கு வாக்களியுங்கள்!!



X

(சி-7434)

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)

# தேசியத்தை உருவாக்கியவர்களே தேசத்தைப் பிரிக்கிறார்கள்

## பேராசிரியர் சிவத்தம்பி பி.பி.ஸிக்குப் பேட்டி

(லண்டன்)

**வடக்கு - கிழக்கு மாகாணத்தை இணைத்து அரச ஒடுக்கு முறைகளுக்கு எதிரான தேசிய உணர்வை உருவாக்கிய தமிழ் இளைஞர்களே, இன்று வடக்கு - கிழக்கு மாகாணத்தை பிரிக்க முயலுகின்றார்கள். இது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.**

இவ்வாறு இலங்கை மூத்த தமிழ் இலக்கியவாதியும் சமூக ஆய்வாளருமான பேராசிரியர் கா.சிவத்தம்பி தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயகத்தில் இருந்து கருணா பிரிந்து சென்றதையடுத்து, வடக்கு - கிழக்கு என்ற பிரதேசவாதங்கள் எழுப்பப் பட்டுவருவது தமிழ் சமூகத்தை பாதிக் குமா? என்பது பற்றி லண்டன் பிபிஸி யின் தமிழ் சேவைக்கு அவர் வழங் கிய விசேட செவ்வியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து வழங் கிய செவ்வியின் விபரம் வருமாறு,

இலங்கையில்வடகிழக்கு மாநிலம் என்பது இன்று அரசியல் யதார்த்த மாகவுள்ளவொருவிடய மாக இருக்கின்றது.

அந்த அரசியல் யதார்த்தம் என்ன வென்றால், தமிழ் பேசும் மக்களு டைய தாயகமாக்க் கொள்ளப்படத் தக்க மாநிலமாக வடக்கு- கிழக்கு மாநிலம் அமைகின்றது என்பதுதான்.

இதனை 1959 ஆம் ஆண்டில் இருந்து இன்றுவரை அதாவது அர சுக்கும் தமிழீழ விடுதலைப் புலி களுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகிய காலம்வரை சகல இனமக்களும் ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள்.

இந்த அடிப்படையில் தான் தமிழ் மக்களுடைய அரசியல் விடயங்கள் மாத்திரமன்றி, வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் வாழ கின்ற முஸ்லிம்களுடைய அரசியல் விடயங்களையும் தமிழ் பேசும் மக்களுடைய தாயகமாக கொள்ளும் வடகிழக்கு மாநிலத்தை அடிப்படை யாக வைத்து செய்யவேண்டும் என்பதை மறைந்த முஸ்லிம் காங் கிரஸ் தலைவர் அஷ்ரப் மிக அழுத் தம் திருத்தமாக கூறியிருந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் ஏற்பட்டுள்ள பிளவு நிலை பற்றி நாம் பெரிதாக அக் கறை கொள்ளாவிட்டாலும், வடக்கு - கிழக்குமாகாணத்தை பிரிக்கவேண்டும் என்ற கருணா வின் நிலைப்பாட்டை மிகவும் கூர்மையாக அவதானிக்க வேண்டும்.

விடுதலைப் புலிகள் இயக்கத் திற்கும் கருணாவிற்கும் இடையில் கருத்து முரண்பாடுகள், இருக்க லாம் சில கோப தாபங்கள் இருக் கலாம் அதனையெல்லாம் நாம் பொருட்படுத்தக் கூடாது.

ஆனால் வடக்கு - கிழக்கு இணைந்த மாநிலத்தைத் துண்டாடுவது என்ற கருணாவின் நிலைப்பாட்டிற்கு மக்கள் இடம் கொடுக்கக்கூடாது.

ஏனெனில் வடக்கு - கிழக்கு மாநிலம் பிரிக்கப்படுவதன் மூலம் தமிழ் பேசும் மக்களின் அரசியல் விருப்பும் அதனுடைய ஒருங்கி ணைப்பும் பாதிக்கப்படும்.

அத்துடன் தமிழ் பேசும் மக்கள் மீதான அடக்கு முறைகள் அதி கரிக்கப்படும் அபாயமும் இங்கு உரு வாகலாம். தமிழ் பேசும் மக்கள் ஒன்று சேரும் போதுதான் அவர் களின் அரசியல் அபிலாஷைகள் பூர்த்தி செய்யப்படும் என்பதுடன் உரிமைகள் பெற்றுக் கொடுக்கப் படும், நிம்மதியான வாழ்வுகிடைக்கும்.

தமிழ் பேசும் மக்களின் பலம் குறைகின்றபோது, அதாவது மக் களின் ஒற்றுமையை சீர்குலைக் கின்ற போது மேற்கூறப்பட்ட விடயங்களை மக்கள் பெற முடியாத நிலை உருவாகும்.

எனவே தமிழீழ விடுதலைப் புலிகளால் கடந்த 30 வருட கால மாக தமிழ் பேசும் மக்களிடையே கட்டி வளர்க்கப்பட்ட ஒற்றுமை தொடர்ந்தும் பேணப்படவேண்டும். வடக்கு - கிழக்கு மாநிலத்தை பிரிக்கும் எண்ணப்பாட்டை சகல மக்களும் எதிர்க்க வேண்டும். இந்த விடயத்தில் இரு பகுதியினரும் அதாவது கருணாவும் விடுதலைப் புலிகள் இயக்கமும் மிக அவதான மாக கடந்து கொள்ளவேண்டும்.

இது தொடர்பான யோசனை களை செயற்பாடுகளை மிக ஆழ மாக ஆராய்ந்து நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும்.

இதனால் தமிழ் பேசும் மக்கள் எந்த வகையிலும் பாதிக்கப்படக் கூடாது, அத்துடன் சமாதான முயற்சி களுக்கு கருணாவின் செயற்பாடுகள் முட்டுக்கட்டையாக இருக்கக் கூடாது.

இதுவே எமது மக்களின் எதிர் பார்ப்பும் விரும்பமுமாகும் என்றார்.

(தி-62,10)

## தேர்தல்.க.கா. குழுவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் வாக்காளர் அட்டை விநியோகம்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலுக் கான வாக்காளர் அட்டை விநி யோகத்தின்போது அப்பணிகளைத் தேர்தல் கண்காணிப்புக் குழுவின் அதிகாரிகள் நேரடியாக கண்கா ணிப்புக் கடமையில் ஈடுபடவுள்ள தாக தபால் மா அதிபர் சேவன் சேனாதீர தெரிவித்துள்ளார்.

அத்துடன், வாக்காளர் அட்டை களை விநியோகிக்கும் தபால்க் காரர்களுக்கும் விஷேட பாதுகாப்பு வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நாட்டிலுள்ள சகல பிரதான தபால் நிலையங்களுக்கும் விஷேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கவும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேலும், வாக்காளர் அட்டை விநியோகக் கண்காணிப்பு நடவடிக் கைகளை நாளை முதல் தேர்தல் திணைக்கள அதிகாரிகள் மேற் கொள்ளவுள்ளதுடன், இவ் வாக் காளர் அட்டை விநியோகத்தின் போது தீவிர பாதுகாப்புத் தேவை யெனக் கண்டறியப்பட்டுள்ள பகுதி களுக்கு விஷேட பாதுகாப்பு ஏற் பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவற்றுக்குப் பொறுப்பாக மாகாணப் பிரதித் தபால் அதிபர் கள் செயற்படவுள்ளனர். இதே வேளை, 22 மாவட்டங்களுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை தபாலில் அனுப்பும் நடவடிக்கைகளை அந்தந்த மாவட்டத் தெரிவத்தாட்சி அதிகாரி கள் செயற்படுத்தவுள்ளனர்.

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை விநியோகிக்கும் பணிகள் இன்று செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பமாகி எதிர்வரும் 25 ஆம் திகதி வரை நடைபெறுமென தேர்தல் திணைக் களம் அறிவித்துள்ளது. (தி-18)

## வெங்காயச் செய்கையில் நாட்டம்

(இணுவில்)

உடுவில் கமநல சேவைகள் பிரிவுக்குட்பட்ட பிரதேச விவசாயிகள் வெங்காயச் செய்கையில் அதிக ஆர்வம் காட்டிவருகின்றனர்.

வெங்காய உற்பத்திப் பொருட் களுக்கு தற்பொழுது தென்னி லங்கையில் அதிகவரவேற்புக் காணப்படுகிறது. இதனால் ஏற்று மதி வசதிகளும், அதிகலாப மீட்டக் கூடிய சந்தைவாய்ப்பும் கிடைக்கப் பெற்றுள்ளமையைத் தொடர்ந்தே விவசாயிகள் வெங் காயச் செய்கையில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதேவேளை கடந்த வருடம் மேற்படி கமநல சேவைகள் பிரி வில் 80 ஹெக்டேயர் நிலப்பரப்பில் வெங்காயம் செய்கை பண்ணப் பட்டபோதிலும், திடீரென ஏற்பட்ட நோய்த் தாக்கங்கள் காரணமாக விவசாயிகள் போதியளவு வருமா னம் ஈட்ட முடியாது போனமையும் குறிப்பிடத்தக்கது. (தி-122)

## பெண்களால் சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்

### மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் உரை

(யாழ்ப்பாணம்)

பெண்கள் எமது சமூகத்தில் மாற்றத்தினை ஏற்படுத்த முன்வர



வேண்டும். அதன் மூலம் தேசத் தின் விடுதலையை விரைவுபடுத்த முடியும். அரசியலில் பெண்கள் பங்குகொள்வதால் பெண் இனத் தின் எழுச்சியை மேலோங்கச் செய்யலாம்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி யாழ்ப்பாணத் தில் நடைபெற்ற முக்கிய கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரை யாற்றும் போது குறிப்பிட்டார்.

இக் கூட்டத்தில் பொறுப்பாளர் தமி ழினி தொடர்ந்து உரையாற்றும் போது,

தமிழ் இனத்தின் பல்வேறு தளங் களிலும் முடங்கிப் போயுள்ள பெண்களை வெளியே கொண்டு வரவேண்டும். எமது தேசிய விடு தலைப் போராட்டத்தில் பெண்கள் தான் சமூக மாற்றத்தினை ஏற்படுத்த வேண்டும். அதன் மூலம் தேசிய விடுதலையை விரைவுபடுத்தலாம். தேச நிர்மாணப் பணிகளில் பெண் கள் தமது பங்களிப்பை ஆற்ற முன் வரவேண்டும்.

சமுதாயத்தில் மாற்றம் ஏற்பட வேண்டுமாயின், அதன் முதற்படி பெண்கள் தான். இது வரை கால மும் எமது பெண்கள் பிற்போக்குத் தனமாக இருந்து வந்துள்ளனர். நாம் இனிமேல் நிறைவான சுதந் திரமான வாழ்க்கையை வாழ வேண்டும். பெண்கள் தம்மன, உள இருட்டுக்குள் இருந்து வெளியில் வரவேண்டும். எம் மன துக்குள் இருக்கும், இருட்டுக்கள் அகற்றப்படவேண்டும்.

பெண்கள் சமுதாயத்தில் தன் னம்பிக்கையுடனும், சந்தர்ப்பங்க ளுடனும் வாழ்கின்ற போது புதிய சாதனைகளை உருவாக்குவார் கள். சமுதாயத்திலுள்ள எல்லாத் துறைகளிலும் பெண்கள் பிரகாசிக்க வேண்டும் என்பது எமது தேசியத் தலைவரின் பெருவிருப்பமாகும்.

பெண்கள் வாழ்க்கையில் அடங்கி ஒடுங்கி இருக்காமல் தீர் மானங்கள் எடுக்கின்றவர்களாகவும் தன்னம்பிக்கையுள்ளவர்களாகவும் மாறவேண்டும். சொல்லுக்கு முதல் செயல் இருக்கவேண்டும் என்றார்.

(தி-16)

## பாராளுமன்றம் புனரமைப்பிலிருந்து எமது திட்டம் ஆரம்பமாகும்

### ஹெல உறுமயக் கட்சி கருத்து

(கொழும்புத்துறை)

பாராளுமன்றத்தைப் புனரமைக் கும் நடவடிக்கைகளில் இருந்து எங்களது செயல்திட்டங்கள் ஆரம்பமாகுமென தேசிய ஹெல உறுமயக் கட்சியின் அதியுயர் பீடசெயலாளர் உடுவே தம்மாலக்க தேரர் தெரிவித்துள்ளார்.

மத்துகம நகரில் நேற்று முன் தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

பாராளுமன்றம் தற்போது ஒழுங்கற்ற நிலையில் காணப்படு கின்றது. மக்கள் விடுதலை முன் னணியின் பிரதிநிதிகள் பாராளு மன்றத்திற்குள் நுழைந்தால் இந் நிலை மாறும் என எதிர்பார்த்த போதும் அது இடம்பெறவில்லை.

ஏனைய பாராளுமன்ற உறுப் பினர்களினதும் கட்சிகளினதும் நிலைக்கே அவர்களும் மாறியிருக் கின்றார்கள்.

மக்கள் விடுதலை முன்னணி மீது மக்கள் கொண்டிருந்த நம் பிக்கை தற்போத தளர்ந்து கொண் டிருக்கின்றது.

இதனால், தர்மத்துக்கு ஏற்ற வகையில் நாட்டைக் கொண்டு செல்லும் முகமாக நாங்கள் தேர் தல் களத்தில் குதித்திருக்கின் றோம் என்றார். (தி-61,10)

## பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த பிரதமர் ரணில் தவறிவிட்டார்

### முதல் முறையாக குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய அரசாங்கம் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்தி ரப்படுத்தத் தவறிவிட்டது என முதன் முறையாக குற்றஞ்சாட்டப்பட்டுள் ளது. ஆனால் அது வடக்கு - கிழக்கு விவகாரத்தை நல்ல முறையில் அது கையாண்டுள்ளது என நாட்டு மக்கள் கருத்துத் தெரிவித்துள்ளார் கள் என நிறுவனம் ஒன்று நடாத்திய கருத்துக்கணிப்பில் இருந்து தெரிய வருகிறது. இவ் வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

வடக்கு - கிழக்கு மக்கள் மட்டு மன்றி நாட்டின் சகலரும் பொருளா தார சிக்கல்களை சந்தித்துள் ளார்கள். இதேவேளை, தற்போது முதன்மைப்படுத்தப்படுகின்ற வடக்கு - கிழக்கு விவகாரத்தினை மிகச் சிறந்த முறையில் கையாளு வதற்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கமே பொருத்தமானது என்பது இந்நாட்டு மக்களின் ஏகோ பித்த கருத்து.

நாட்டின் சகல பிரிவினரையும், சகல வயதுப் பிரிவினரையும் உள் ளடக்கிய சுமார் 2 ஆயிரம் பேரிடம் இக்கருத்துக் கணிப்பு நடாத்தப் பட்டது. தேர்தல் அறிவிப்புக்கு முன் தென்னிலங்கை மக்களின் முக்கிய பிரச்சினையாக பொருளா தாரமும் 2 வது பிரச்சினையாக வடகிழக்கு விவகாரமுமே இருந்து வந்தது.

ஆனால் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பும் வடக்கு - கிழக்கு பிரச்சினையும் ஒரே முக்கியத்துவம் உடைய முதன்மையான ஒன்றாக தென்பகுதி மக்கள் கருதுகின்றனர் என்பது இக்கருத்துக் கணிப்பின் மூலம் அறியவந்துள்ளது. இதற்கு காரணம்,

கடந்த 2 வருடங்களாக ஐக் கியதேசிய முன்னணி அரசு சமா தானப் பேச்சுக்களையும், போர் நிறுத்த உடன்படிக்கையையும் உறுதியாக பேணிவந்துள்ளது. ஆனால் மக்கள் பொருளாதாரத் திற்கு முதன்மையளித்தனர். ஆனால் தற்போது நிலவும் அரசி யல் ஸ்திரமின்மையும், சமாதானம் பற்றிய நிச்சயமற்ற தன்மை காரண மாக மக்கள் மீண்டும் சாதித்து விட்டனர். இதன் மூலம் அரசியல் தலைவர்களின் தெளிவற்ற நிலையை மக்கள் எடுத்துரைத்துள்ளனர் என அவ்வறிக்கை மூலம் தெரியவந் துள்ளது. (தி-06)

# அடிப்படை வசதிகளற்ற நிலையில் காரைநகர் நீலங்காடு கிராம மக்கள்

(காரைநகர்)
காரைநகர் நீலங்காடு கிராமத்தில் அடிப்படை வசதிகளற்ற நிலையில் சுமார் 20 குடும்பங்கள் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றன.

இந்நிலைமை தொடர்பாக நீலங்காடு கிராம அபிவிருத்திச் சங்கம், காரைநகர் பிரதேச செயலருக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

யுத்த நடவடிக்கைகளால் 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் காரைநகர் நீலங்காடு பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து சென்ற மக்கள், 2001ஆம் ஆண்டில் சுமுகமான நிலையை அடுத்து இக்கிராமத்தில் மீளவும் தற்காலிக குடிசைகள் அமைத்துக் குடியேறினர்.

ஆயினும், இன்றுவரை இவர்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவில்லை. அத்துடன், குடிநீர் வசதியோ அன்றி மலசலகூட வசதியோ அற்ற நிலையில் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

குடிநீரை ஒரு கிலோமீற்றருக்கு அப்பால் சென்றே பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, இந்நிலைமைகளைக் கவனத்திற்கொண்டு, இப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உடன் நடவடிக்கைகளை எடுக்குமாறு அனுப்பிவைக்கப்பட்டுள்ள அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி-246)

## யாழ். மாவட்ட அரசாங்க அதிபரின் அறிவித்தல்

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள குடத்தனைக் கிராமத்தில் மணல் கும்பிகளில் இருந்து கட்டுமான வேலைகளுக்கு வெள்ளைமணல் அகழ்ந்து விற்றலுக்கான கோரிக்கை.

குடத்தனைக் கிராமத்தில் புவிச்சரிதவியல் அளவை, சுரங்கங்கள் பணியகத்தினால் இனங்காணப்பட்டுள்ள மணற்கும்பிகளிலிருந்து புவிச்சரிதவியல் அளவை, சுரங்கங்கள் பணியகத்தின் உரிமத்தின் கீழ் கட்டடப்பணிகளுக்கு மணல் அகழ்ந்து விற்பனை செய்யும் சேவையை மேற்கொள்ள விரும்பும் பதிவு செய்யப்பட்ட வடமராட்சி கிழக்கு உ.அ.அ. பிரிவின், வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவின் நலன் விரும்பிகள்,சமூக நிறுவனங்கள் மற்றும் தனியாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான**

**இறுதித் திகதி:-2004-03-25**

**விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கவேண்டிய முகவரி:-**

**அரசாங்க அதிபர்**
**மாவட்ட செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**

*விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் கடித இடதுபக்க மேல் மூலையில் "மணல் அகழ்வதற்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்படவேண்டும்.*

*இச்சேவை தொடர்பான நிபந்தனைகள், விண்ணப்படிவங்களை யாழ் மாவட்ட செயலக தலைமை அலுவலக உதவி அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.*

*செ.பத்மநாதன்*
*அரசாங்க அதிபர்,*
*யாழ்மாவட்டம்.*
(சி-7388)

## பரிசளிப்புவிழா

(மருதங்கேணி)
கிளிநொச்சியிலுள்ள திருநெறிக் கழகத்தினரால் கிளிநொச்சி வலயப் பாடசாலைகளில் நடத்தப்பட்ட உயர்தரவகுப்பு மாணவர்களுக்கான இந்து சமயம், இந்து நாகரிகம் ஆகிய பாடங்களிலான போட்டிப் பரீட்சைகளில் அதியுயர் புள்ளிகள் பெற்ற மாணவர்களுக்கான பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 13ஆம் திகதி வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப. அரியநாயகம், கரைச்சிப் பிரதேச செயலர் பொ.நித்தியானந்தன் ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (தி-35)

# ஜனாதிபதியைப் போன்ற ஊழல் பேர்வழி உலகில் எங்குமில்லை

## அமைச்சர் எஸ்.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)
ஜனாதிபதி தன்மீது அவதூறு பேசியதற்காகத்தான் ஜனாதிபதியிடம் ஒரு பில்லியன் ரூபா நட்டஈடு கோரவுள்ளதாக அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்துள்ளார். நட்டஈடு கோருவதற்கு வசதியாக நிறைவேற்று ஜனாதிபதி முறையில் உள்ள சட்டவிதிகளுக்கு விடுபாட்டுரிமை வழங்க வேண்டும் எனவும் அமைச்சர் ஜனாதிபதிக்குச் சவால் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது ஜனாதிபதியைவிட அதிகமான ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட எந்தவொரு நாட்டுத் தலைவரும் உலகில் கிடையாது என்றார். அண்மையில் வர்த்தக சமூகத்தவரைச் சந்தித்த ஜனாதிபதி, பொ.ஐ.மு.ஆட்சிக்காலத்தில் ஊழல் புரிந்த அமைச்சர்களுக்கு எதிராகத் தான் நடவடிக்கை எடுக்கவிருந்த வேளையில், அவர்கள் ஐ.தே.முவுக்கு தாவிவிட்டனர் எனத் தெரிவித்தார். இதற்குப் பதிலளிக்கும் முகமாகவே அமைச்சர் இக் கருத்தை தெரிவித்தார்.

மேலும், ஊழல் புரிந்த அமைச்சர்கள் பொ.ஐ.முவில் இருந்தபோது எதுவும் பேசாதிருந்த ஜனாதிபதி ஐ.தே.முவுக்கு மாறியபின் இதுபற்றிப் பேசுவது புரியாத புதிராகவே இருக்கிறது என்றார்.

இதேவேளை, வர்த்தகருடனான சந்திப்பின்போது கூட்டு வர்த்தக சங்கத் தலைவர் மகேந்திர அமரசூரிய, ஊழல்புரிந்த அரசியல்வாதிகளைத் தண்டிக்க ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் ஜனாதிபதிக்கு எதிராகவும் ஊழல்குற்றச்சாட்டுக்கள் உள்ளனவே என்றும் சுட்டிக்காட்டியிருந்தார். (த-6)

## கூட்டம்

சங்கானைப் பிரதேச செயலர் பிரிவின் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான பிரதேசமட்ட விளையாட்டுப்போட்டி நிகழ்வுகளில் நாளை புதன்கிழமை காலை 7.00 மணிக்கு சைக்கிள் மற்றும் மரதனோட்டப் போட்டி நிகழ்வுகளும், 19,20ஆம் திகதிகளில் மெய்வல்லுநர் போட்டி நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

இப்போட்டி நிகழ்வுகள் தொடர்பான விசேட கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு சங்கானை பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி கலந்துரையாடலில் பிரதேச விளையாட்டுக்கழகப் பிரதிநிதிகளைத் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (தி-68)

## 51,202 பேர் சிகிச்சை

(மருதங்கேணி)
பூநகரி தியாகதீபம் திலீபன் மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டு 2ஆண்டுகள் நிறைவுபெறும் நிலையில் இது வரை 51ஆயிரத்து 202 நோயாளர்கள் சிகிச்சைபெற்றுள்ளனர்.

அத்துடன் 15 மகப்பேறுகளும் இங்கு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தி-35)

## மின் வழங்கல்

(கந்தர்மடம்)
மட்டுவில் தெற்குப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் தற்போது ஆரம்பித்துள்ளன.

கடந்தகால யுத்தம் காரணமாக மேற்படி பகுதிகளுக்கான மின் வழங்கல் தடைப்பட்டிருந்தது. இதனால், அப்பிரதேச மக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வந்துள்ளனர்.

இதனைக் கருத்தில் கொண்டே இப்பகுதிக்குரிய மின்வழங்கலுக்கான பூர்வாங்க நடவடிக்கைகள் தற்பொழுது இலங்கை மின்சார சபையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (தி-112)


தன் நலம் கருதாத தனிப் பெருந்தலைவன்...சங்கரி



வீ.ஆனந்தசங்கரி
(முன்னாள் பா.உ. யாழ்ப்பாணம்)

யாழ். தேர்தல் மாவட்ட வாக்காளர்களே!

- மக்களால் தெரிவு செய்யப்பட்டால் அன்றி பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ஏற்கமாட்டேன் எனக் கூறிய பெருந்தகை

ஆனந்தசங்கரி

- என் இறுதி மூச்சு உள்ளவரை பெருந் தலைவர்களால் உருவாக்கிப் பாதுகாக்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியை அழியவிடாது பாதுகாப்பேன் எனத் தர்மயுத்தம் நடத்தும் நிகரில்லாத் தலைவன்

ஆனந்தசங்கரி



குணானந்தன்
(வங்கி அதிகாரி)

தலைவன் நோக்கம் நிறைவேற, தமிழினம் சுயநிர்ணய உரிமையுடன் வாழ்ந்திட

வீ.ஆனந்தசங்கரி (தலைவர்-தமிழர் விடுதலைக் கூட்டணி)

தலைமையிலான

சுயேச்சைக் குழு 1 | 4 | 8

வெல்ல வைத்து சேவையைப் பெறுவதே எம்பணி

சுன்னாகம்-மக்கள்.

அறிவித்தல்:- எக்காரணம் கொண்டும் எனது தலைமையிலான சுயேச்சைக்குழு - 1 இத்தேர்தலில் இருந்து விலகிக்கொள்ளமாட்டார்கள் என்பதை உறுதியுடன் தெரிவிக்கின்றேன். தயவுசெய்து வீண் வதந்திகளை நம்பவேண்டாம்.
(சி-7436)

# சோசலிஸ தொழிலாளர் கட்சி ஸ்பெயினில் ஆட்சியை அமைக்கும்

ஸ்பெயின் தேர்தலில் சோசலிஸ தொழிலாளர் கட்சி ஆட்சியை அமைக்கும்.

நடந்து முடிந்த ஸ்பெயின் பாராளுமன்றத் தேர்தலில் பழமைவாதக் கட்சியை மண்கவ்வச் செய்தது சோசலிஸ தொழிலாளர் கட்சி.

350 பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் இத்தேர்தலில் 164 இடங்களை சோசலிஸ தொழிலாளர் கட்சியும், பழமைவாதக் கட்சி 148 இடங்களையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதர கட்சிகளும் சோசலிஸ தொழிலாளர்கட்சியுடன் இணைந்து அரசை அமைக்குமென அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

பாரிய ரயில் குண்டுத்தாக்குதலின் பிரதிபலிப்பே பழமைவாதக் கட்சியின் தோல்விக்குக் காரணமென்று தெரியவருகிறது. (து)

## விளாடிமிர் புட்டின் மீண்டும் ரஷ்யாவின் அதிபரானார்

(மாஸ்கோ)

ரஷ்ய அதிபர் தேர்தலில் விளாடிமிர் புட்டின் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

புட்டினுடன் இத் தேர்தலில் 5 பேர் போட்டியிட்டனர். இத்தோதலில் 69 வீத வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

வெற்றி பெற்ற புட்டின் ரஷ்யாவை பொருளாதாரத்தில் கட்டியெழுப்பப் போவதாகவும் தொழிலாளர் வர்க்க மேம்பாட்டிற்காக பாடுபடப்போவதாகவும் தெரிவித்துள்ளார். (து)

## தேர்தல் நடத்தை விதிகளை மீறும் முதல்வர் ஜெயலலிதா!

### தேர்தல் தலைமை ஆணையரிடம் புகார்

(சென்னை)

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி குறித்து முதலமைச்சர் ஜெயலலிதா பேசியிருப்பதாக தலைமைத் தேர்தல் ஆணையரிடம் புகார் செய்யப்போவதாக தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் ஜீ.கே.வாசன் கூறியிருக்கிறார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நேற்று முன்தினம் சென்னையில் தமது தேர்தல் பிரசாரத்தின் போது முதலமைச்சர், சோனியா காந்தி குறித்துத் தெரிவித்த கருத்துக்கள் தேர்தல் நடத்தை விதிமுறையை மீறும் செயலாகும் என்று குற்றஞ் சாட்டினார்.

சோனியா காந்தி இந்தியர்தான் என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்திருந்ததைச் சுட்டிக்காட்டிய அவர், நாட்டின் வடக்குப் பகுதியிலும் தெற்குப் பகுதியிலும் அவர் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்றும் எதிர்க்கட்சி உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார் என்றும் கூறினார். (து)

## உலக தரிசனம்

### சீனாவில் சொத்துக்கள் பாதுகாப்பு

(பெய்ஜிங்)

தனியார் சொத்துக்களைப் பாதுகாக்கும் திருத்தமொன்று சீனப் பாராளுமன்றத்தில் நிறைவேறியது. பொதுவுடமை நாடான சீனாவின் நாடாளுமன்றத்தில் இந்த அரசியல் சாசனத் திருத்தம் கொண்டு வரப்பட்டது.

நீண்ட விவாதத்தின் பின் தனியார் சொத்துக்களைப் பாதுகாப்பது தொடர்பான திருத்தத்தை நாடாளுமன்றம் ஏற்றுக் கொண்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (து)



ஸ்பெயினின் மேட்ரிட் நகரில் 3 ரயில்களில் வைக்கப்பட்டிருந்த குண்டுகள் அடுத்தடுத்து வெடித்ததில் சுமார் 200 பேர் உயிரிழந்தனர். 400க்கும் அதிகமானோர் காயமடைந்து மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். குண்டு வெடிப்பில் காயமடைந்த ஒருவரை சிகிச்சைக்காக கொண்டு செல்லும் காட்சி.

## ஜம்மு காஷ்மீரை மையமாக கூட்டறிக்கையில் வைக்கவில்லை

### இந்தியா மறுப்பு

(புதுடில்லி)

இந்தியா-பாகிஸ்தான் ஜனவரியில் வெளியிட்ட கூட்டறிக்கையில், எந்தவொரு மையப்புள்ளியும் வைக்கப்படவில்லையென்றும், ஜம்மு காஷ்மீர் உட்பட எல்லா விடயங்களும் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு இந்திய வெளியுறவு அமைச்சு வெளியிட்ட மறுப்பறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய-பாகிஸ்தான் கூட்டறிக்கையில் ஜம்மு காஷ்மீரை மையக் கருத்து என்று இந்தியா ஒப்புக் கொண்டதாக பாகிஸ்தான் அதிபர் முஷாரப் ஒரு கூட்டத்தில் பேசியிருந்தார். இதற்குப் பதில் கொடுக்கும் முகமாகவே இந்திய வெளியுறவு அமைச்சு மறுப்பறிக்கையை வெளியிட்டுள்ளது.

ஜனவரியில் செய்யப்பட்ட கூட்டறிக்கைக்கு பாகிஸ்தான் ஒருதரப்பாக விளக்கம் தருவது நம்பிக்கையை உருவாக்குவதற்கோ சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கோ உகந்ததில்லையென்று வெளிவிவகார அமைச்சின் அறிக்கை தெரிவிக்கின்றது.

இதேவேளை, ஜனவரிக்குப்பின் கடைப்பிடிக்கப்படும் நிதானத்திற்கும் பரிவுணர்விற்கும் மாறாக அதிபர் முஷாரப் கருத்துத் தெரிவிக்கிறார்.

எனினும் இந்தியா கூட்டறிக்கையின் அடிப்படையில் செயல்படுகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (து)

## விசாரணைக் கமிஷனின் கால எல்லை நீடிக்கப்பட்டது

அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டது குறித்து விசாரணை நடத்திவரும் லிபரோன் கமிஷனின் பதவிக் காலத்தை மத்திய அரசு 6 மாதகாலம் நீடித்துள்ளது.

இக்கமிஷனின் பதவிக் காலம் இம்மாதம் 31ஆம் திகதியுடன் முடிவடைகிறது. தற்போது செப்ரெம்பர் 30ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. (து)

## இஸ்ரேலில் குண்டு வெடிப்பு 17 பேர் பலியாகினர்

(ஜெருசலேம்)

இஸ்ரேலின் ஆஷ்றோ துறைமுகத்தில் இரண்டு தற்கொலைக் குண்டுத் தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் நடந்த இத் தாக்குதலில் 17பேர் கொலை செய்யப்பட்டதாகவும் 10பேர் படுகாயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கமாஸ் இயக்கமும் அல்அஸா இயக்கமும் இத்தாக்குதலுக்கு உரிமை கோரியிருக்கின்றன.

பிரதான ஆஷ்றோத் துறைமுகத்தின் களஞ்சிய அறையில் இத்தாக்குதல்கள் இடம்பெற்றதால் இஸ்ரேல் பிரதமருக்கும் பாலஸ்தீனப் பிரதமருக்குமிடையில் நடைபெற இருந்த பேச்சுவார்த்தைகள் தடைப்பட்டுள்ளது. (து)



ஸ்பெயினில் நடந்த குண்டுவெடிப்புத் தாக்குதலில் காயமடைந்தவர்கள் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தேவைப்படும் இரத்தத்தைப் பெற ஆங்காங்கே இரத்ததான முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. முகாம்களில் நீண்ட வரிசையில் நின்று இரத்தம் கொடுப்பதற்காக காத்திருக்கும் மக்கள்.

### மக்களின் கவனத்தைத் திசைதிருப்ப ஜெயலலிதா முயற்சி

(சென்னை)

அ.இ.அ.தி.மு.க. அரசின் குறைபாடுகளிலிருந்து மக்களின் கவனத்தைத் திசைதிருப்பவே கூட்டணிக் கட்சிகளை ஜெயலலிதா தரம் தாழ்த்தி விமர்சிப்பதாக பா.ம.க.நிறுவுனர் டாக்டர் ராமதாஸ் குறை கூறியிருக்கின்றார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் ஜெயலலிதாவின் குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை என்று கூறியிருக்கிறார். (து)

## அணு ஏவுகணைச் சோதனையைக் குறைக்குக பாகிஸ்தானுக்கு அமெரிக்கா வேண்டுகோள்

2000 கிலோமீற்றர் தூரத்துக்கு பாய்ந்து சென்று தாக்கக் கூடிய நெடுந்தொலைவு, அதி நவீன அணு ஏவுகணையை பாகிஸ்தான் கடந்த செவ்வாய்க்கிழமை அன்று வெற்றிகரமாக செலுத்தி சோதனை நடத்தியது. இது முழுவதும் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இதனை அடுத்து அமெரிக்கா, பாகிஸ்தானை அணு ஆயுத சோதனைகள் நடாத்துவதைக் கைவிடுமாறு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

பாகிஸ்தானில் இப்பொழுது வெற்றிகரமாக நடாத்தப்பட்ட சாகின் - 2 ஏவுகணையின் தொழில்நுட்பம் 90 களிலே சீனாவில் 17-8, 17-2 மற்றும் 17-18 ஆகிய ஏவுகணைகளின் தொழில்நுட்பத்திறமையை அடிப்படையாகக் கொண்டே வடிவமைக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தானின் அணு விஞ்ஞானி அப்துல் காபீர் கான் அணு ஏவுகணை தொழில்நுட்ப இரகசியங்களை ஈராக் லிபியா ஆகிய நாடுகளுக்கு வெளியிட்டதைத் தொடர்ந்து வடகொரியா தன்னுடைய நோடென் ஏவுகணையின் தொழில்நுட்பம் மற்றும் திரவ எரிபொருட்களில் பயன்படுத்தும் விதம் என்பவற்றை பாகிஸ்தானுக்கு வழங்கியுள்ளது.

இதன் அடிப்படையிலேயே பாகிஸ்தான் காரி என்ற ஏவுகணையை செலுத்த உபயோகித்துள்ளது. இந்த சூழ்நிலையின் பின்னணியில் தான் அமெரிக்கா பாகிஸ்தானை அணுஏவுகணைச் சோதனைகளைக் குறித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளது. பாகிஸ்தானின் அணு ஆயுத இரகசியங்கள் கைமாறிய இரகசியம் வெளிவந்த பிறகும், அமெரிக்கா கண்டும் காணாதது போல இருப்பது கண்கூடு. இதற்குக் காரணம் பின்வரும் நாளில் தாய்பான் மற்றும் அல்கெய்டா போன்ற தீவிரவாத இயக்கங்களின் தலைவர்களை தேடும் பணியில் பாகிஸ்தான் உதவும் என்ற நம்பிக்கை இருப்பதாக அமெரிக்க உதவி இராணுவ செயலாளர் கால்வே லெத்ஸ் கூறியுள்ளது நினைவு கூரத்தக்கது.

மேலும் அவர் பாகிஸ்தான் அமெரிக்காவுக்கு அளித்த உறுதிமொழிகளை பின்பற்றவில்லை என்று கூறியுள்ளமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இவ்வாறு ஒன்றுக்கொன்று உதவ இருநாடுகளும் ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டுள்ளது. அது அமெரிக்கா, பாகிஸ்தானுக்கு 700 கோடி அமெரிக்க டொலர்கள் கொடுத்து உதவ முன்வந்துள்ளது. இது அமெரிக்கா, இந்தியாவிற்கு அளித்து வரும் உதவியை விட ஆறு மடங்கு அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவின் இந்த மெத்தனமான போக்கு உலக அமைதிக்கு அல்லது அணு ஆயுத இரகசியம் வெளியாகாமல் தடுக்கவே இல்லை என்றுதான் கூறவேண்டும்.

பாகிஸ்தானின் சாகின் - 2 அணு ஏவுகணைச் சோதனை இந்தியாவிற்கு வியப்பைத் தரவில்லை என்றாலும் இந்திய கிரிக்கெற் அணி பாகிஸ்தானுக்கு சென்றிருக்கும் இந்த நேரத்தில் இந்தச் சோதனை நடத்தியிருப்பது இந்தியாவிற்கு வியப்பையே தருகின்றது என்பது உண்மை. பாகிஸ்தானின் இந்த முயற்சி இந்தியா- பாகிஸ்தான் உறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் அமையவில்லை எனலாம். இந்த முயற்சி இந்தியப் பிரதமர் வாஜபாய் அவர்கள் லாகூரின் நல்லெண்ண பயணத்தின் நோக்கத்தையே பல வீனப்படுத்தும் வகையில் உள்ளது. பாகிஸ்தானின் இது போன்ற இரட்டை வேடமுள்ள போக்கு தீவிரவாத இயக்கங்களுக்கு சாதகமாக அமைந்துவிடும் என்று மற்றைய உலகநாடுகள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்துள்ளன. இதன் பின்னணியில் தான் அதிபர் தீவிரவாதத்திற்கு எதிராக ஜகாத் என்ற புதிய போரைத் தொடக்கினார். இந்தக் குற்றச்சாட்டைத் தொடர்ந்து தீவிரவாத இயக்கங்களின் கண்மூடித்தனமான, காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளினால் காஷ்மீரில் ஆயிரக்கணக்கான அப்பாவி முஸ்லிம் மக்கள் கொல்லப்பட்டது மற்றும் இந்திய நாடாளுமன்றம் தாக்கப்பட்டது இரண்டுமே மனிதாபிமானமற்ற செயல்களாகும். தீவிர இயக்கங்களின் அடிப்படை வசதிகள் மற்றும் அவற்றின் முகாம்களை அழித்தல் போன்றவற்றை பாகிஸ்தான் அமெரிக்காவின் நிர்ப்பந்தத்தில் தான் செய்கிறது என்று கூறவேண்டும். ஏனெனில் இது போன்ற நடவடிக்கைகளினால் பாகிஸ்தானுக்கு எந்தவித பயனுமில்லை. எனவேதான் பாகிஸ்தான் அந்நாட்டு மக்களின் நன்மதிப்பைப் பெற சாகின் - 2 என்ற அணு ஏவுகணை சோதனையை நடாத்தியது. பாகிஸ்தானின் இந்த முயற்சி இந்திய துணைக்கண்டத்தில் எந்தவொரு ஆபத்தையும் ஏற்படுத்தாது என்பது கண்கூடாகத் தெரிந்த உண்மை.

(து-121)

## இன்று ஒரு தகவல்

# தேக அபிமானம்

"அந்த ஆள் என்னைக் கன்னாபின்னாவென்று திட்டி விட்டான் சார் அதை நினைத்தால் மிகவும் கவலையாக இருக்கின்றது" என்று கூறிக் கவலைப்பட்டார் ஒருவர். "இதில் கவலைப்பட என்ன இருக்கின்றது!" என்றார் ஒரு பெரியவர். அவர் ஒரு மகான். "என்னசார் இப்படிச் சொல் கிறீகள்? ஒருவர் நம்மைப் பார்த்துத் திட்டினால் வருத்தமாக இருக்காதா? என்றார் இவர். அது எப்படி வருத்தமாக இருக் கும்? திட்டுவது என்பது என்ன? வெறும சத்தம்தானே! " என் றார் பெரியவர்.

நமது ஆளுக்குத் தலையைப் பிய்த்துக் கொள்ளலாம் போலிருந்தது. இருக்காதா பின்னே. நமக்கே அப்படித்தான் இருக்கின்றது. அந்தப் பெரியவர் கூறுவது மிகப் பெரிய விடயம். அதை நாம் புரிந்துகொள்ள முயற்சி செயயலாம் என்றால் நடைமுறை வாழ்வுக்கு அது ஒத்துவருவது போலில்லை. இருந்தாலும் அந்த மகான் இதற்கு என்ன விளக்கம் கொடுக்கிறார் என்று பார்ப்போமே.

ஒரு ரயில் போய்க்கொண்டிருந்தது. அதில் ஒரு சாது ஹரித்துவாரம் போய்க்கொண்டிருந்தார். ரயிலில் ஏகப்பட்ட கூட்டம். தமது ஊர் ரயில் கேட்கவா வேண்டும். டிக்கெற் வாங் கிய பாதிப்பேர். அது ஏன் அனாவசியமாக டிக்கெற் என்ற நினைப்பில் பாதிப்பேர். இந்தக் கூட்டத்தின் மத்தியில் அந்த சாதுவும் போய்க்கொண்டிருந்தார்.

உட்காருவதற்காக இருந்த இடத்தில் ஒரு ஆள் படுத் திருந்தான். கொஞ்சம் முரட்டு ஆசாமி. அவன் கால்பக்கத் தில் கொஞ்சம் இடமிருந்தது. அந்த இடத்தில் இந்தச் சாது போய் அமர்ந்தார். அந்த ஆள் இரவுமுழுதும் இவரைக் காலால் உதைத்துக் கொண்டே இருந்தான். இது இவருக்கு மிகவும் அவமானமாகப்போய்விட்டது. அதனால் துக்கம் ஏற்பட்டது. இருந்தாலும் சகித்துக்கொண்டு வந்துசேர்ந்தார். பொழுது விடிந்தது. அந்த ஞானி ஹரித்துவாரம் போய்ச் சேர்ந்தார். ஒரு பெரிய ஞானியை அங்கு சந்தித்தார். இரவு ரயிலில் அந்த ஆள் உதைத்ததையும், அதனால் தனக்கு ஏற்பட்ட துக்கத்தையும் இவர் அந்த ஞானியிடம் கூறினார். கூறிவிட்டு "ஏன் சுவாமி எனக்குத் துக்கம் ஏற்பட்டதே அது தவறா?" என்று கேட்டார்.

"தவறுதான்"என்றார் அந்த ஞானி. "உனக்கு இன்னமும் தேக அபிமானம் போகவில்லை என்பதைத்தான் இது காட்டுகிறது. அஷ்டாவக்கிரர் என்ன கூறுகிறார் தெரியுமா? உண்மையான ஞானி யாராவது தன்னை வந்தனை செய் தால் அதற்காகச் சந்தோஷப்படமாட்டார். யாராவது நிந்தனை செய்தால் அதற்காக வருத்தப்படமாட்டார் என்று கூறி யுள்ளார்.

நிந்தனை என்பது ஒரு ஒலிதான். தேகாபிமானம் உள்ள வரை இந்த ஒலி நம்மை வேதனைப்படுத்தும். நான் தேக மில்லை. ஆத்மா என்ற நினைவிருந்தால் இந்த ஒலி நம் மைப் பாதிக்காது.

மனு என்ன சொல்கிறார் தெரியுமா? ஒரு சாதகன் பாராட்டுதலை விஷம் என்று நினைத்துப் பயப்பட வேண் டும். அவமானத்தை அமிர்தம் என்று நினைத்து சந்தோஷப் படவேண்டும் என்கிறார். அவமானப்பட்டால் கவலைப்படா மல் எப்படி இருக்க முடியும் என்றுதான் தோன்றும். அத னால் தான் நம்மில் யாரையும் இதற்கு உதாரணம் காட்ட முடியவில்லை. இதற்கு புத்தரையும், கபீரையும் உதாரணம் காட்டுகின்றனர். அவர்கள் அவமானம் ஏற்படும்போது கவலைப்படமாட்டார்கள். புத்தரை அவமானப்படுத்த வேண்டும் என்பதற்காக கௌசாம்பி ராணி ஓர் இளம்பெண்ணைக் கொலை செய்து சடலத்தை புத்தரின் குடிசைக்கு முன்னால் போடச் சொன்னார். போட்டனர். புத்தர் தாம் அந்தப் பெண் ணைக் கெடுத்துக் கொலை செய்துவிட்டார் என்று எல் லோரும் கூறினர். ஆனால் புத்தர் இதைப் பற்றிக் கவலைப் படவில்லை. அதன்பின் உண்மை தெரிந்ததும் புத்தரின் புகழ் இன்னும் அதிகமானது.

ஒரு பெரிய சபையில் ஒரு மோசமான பெண் நுழைந்து தனக்கும் கபீருக்கும் தொடர்பு உண்டு என்றாள். கபீர் கவ லைப்படவில்லை. அவர்களை மாதிரி நாமும் இருக்கக் கற்க வேண்டும். நிந்தனை, அபகீர்த்தி, அவமானம் எல்லாம் ஆண்டவன் கொடுக்கின்ற பிரசாதம் என்று நினைக்க வேண் டும் என்கிறார் அந்த ஞானி.

இதைக்கேட்ட இந்தக்காலத்து ஆசாமி ஒருவர் நான் கூட அப்படித்தான் சார். யாராவது என்னை அவமானப்படுத்தி னால் அதைப் பற்றிக் கவலைப்படமாட்டேன். நேற்றுக் கூட ஒருவர் என்னைப் பளாரென்று அறைந்து விட்டார். நான் சிறிதுகூடக் கவலைப்படவில்லை. பேசாமல் 'வந்தேன் என் றார். "ஏன் அப்படி வந்தீர்கள் ?" என்றேன். "அவர் அறைந் ததிலும் ஒரு நியாயம் இருந்தது. அதனால் அப்படி வந்தேன்" என்றார். "ஏன்அறைந்தார்?" என்று கேட்டேன். " 10 வருடங் களுக்கு முன்பு15 ரூபா கடன் வாங்கினேன் அவரிடம் அதைக கேட்டுப் பார்த்துவிட்டுக் கடைசியாகத் தான் அறைந்தார்" என்றார். ஆண்டவனது பிரசாதம் இவருக்கு அடிக்கடி கிடைக்கும் போல் இருக்கிறது.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# ஐ.தே.மு. ஆட்சியமைத்தால் மீண்டும் ஒரு யுத்தம் நடக்காது!

## வவுனியாவில் பிரதமர் ரணில் உறுதி

(வவுனியா)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி பெரும்பான்மைப் பலம் பெற்று ஆட்சி அமைத் தால் மீண்டுமொரு பாரிய யுத்தத்திற்கு நாட்டை இட்டுச் செல்லமாட்டாது. மாறாக விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப் பதற்கான நடவடிக்கைகளையே நாம் மேற்கொள்வோம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

எந்தப் பிரச்சினையையும் சமாதானப்பேச்சுவார்த்தை மூலம் தீர்த்து வைக்க முடியும். ஆனால் நாம் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணத் தவறியமை யாலேயே அறுபதினாயிரத்திற்கு மேற்பட்ட உயிர்களைப் பலிகொடுக்க நேர்ந்தது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் விடு தலைப்புலிகளுடன் யுத்த நிறுத்த உடன்படிக் கையைச் செய்து கொண்டு சமாதானப் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டமையால், அரசும் விடு தலைப்புலிகளும் ஒன்றிணைந்தது மாத்திர மல்லாமல் 51 உலக நாடுகளும், ஐரோப்பிய ஒன்றியத்தின் 21 நாடுகளும் இதனை அங் கீகரித்து எம்முடன் சேர்ந்து ஒத்துழைக்கவும் உதவிகள் புரியவும் முன் வந்தன.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் இனப் பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வைக் காண விடுதலைப்புலிகள் இணக் கத்திற்கு வந்துள்ளனர். இந்நிலையில் மீண்டும் விடுதலைப்புலிகளுடன் சமாதானப்பேச்சு நடத் தவும் நாம் உத்தேசித்துள்ளோம் என்றும் பிரதமர் ரணில் தெரிவித்துள்ளார். (ம)

# முஸ்லிம்களை புறந்தள்ளிவிட்டு ஆட்சியமைக்க முடியாது

## ரவூப் ஹக்கீம் எச்சரிக்கை


(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் வெற்றி பெறும் எந்தவொரு பிரதான கட்சியும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஆதரவு இல்லாமல் ஆட்சி அமைக்க முடியாது என கட்சியின் தலைவரும் முன் னாள் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஏறாவூரில் நடைபெற்ற பிரசாரக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்,

எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் எந்தவொரு கட்சியும் தனித்து ஆட்சி அமைக்கும் விதத்தில் அறுதிப் பெரும்பான் மையைப் பெறப்போவ தில்லை.



எந்தவொரு அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் இலங்கையின் இனப்பிரச் சினைக்கு தீர்வு காணும் விடயத்தில் முஸ்லிம் மக் களை புறந்தள்ளி விட்டு செயற்பட முடியாது.

இதனை நாம் சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு ஏற்கனவே கொண்டு வந்துள்ளோம்.

அதிலும் குறிப்பாக வடக்கு-கிழக்கு மாகா ணத்தில் வாழும் முஸ்லிம் மக்களை ஓரங் கட்டிவிட்டு ஆட்சிக்கு வரும் எந்தவொரு அரசும் எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்க முடியாது என்றார். (தி-61,10)

## இராசி பலன்

**16. 03. 2004**

**(பங்குனி 03, செவ்வாய்க்கிழமை)**

**தசமி முற்பகல் 10.34 மணி வரை**
**உத்தராடம் நள்ளிரவு 12.05 மணிவரை**
**இராகுகாலம் 3.19-4.49 மணிவரை**
**சுபநேரம் 10.49-12.19மணிவரை**

*சித்தம்*

**மேடம்**
அதிகாரம், நல்ல செய்தி, தொழில் விருத்தி, காரியம் கைகூடும்.

**இடபம்**
புதிய திட்டமிடல், முயற்சி தாமதம், சரீரப் பிரயாசை, பிரயாணம்.

**மிதுனம்**
முயற்சி தாமதம், வாகன பயம், போசன சுகம், வீண்பிரச்சினை.

**கடகம்**
வாக்கு மேன்மை, பிரயாண நன்மை, கலந்துரை யாடல், குடும்பசுகம்.

**சிங்கம**
தெய்வதரிசனம், காரிய நன்மை, தேக ஆரோக்கியம், நல்ல சம்பவம்.

**கன்னி**
முயற்சி தாமதம், தெய்வ சிந்தை, உடல் நலக குறைவு, மனச்சோர்வு.

**துலாம்**
ரோக பயம், எடுத்த காரியம் தாமதம், வேலையில் ஆர்வம், சத்துரு ஜெயம்.

**விருச்சிகம்**
பிரயாண நன்மை, சகோதரர் உதவி, புதிய பொருள சேர்க்கை, பெருமை.

**தனுசு**
உணர்ச்சிவசப்படுதல், தன விரயம், காரிய தாமதம், மாதர்நட்பு.

**மகரம்**
விருந்துபசாரம், தொழில் நன்மை, தேகநலன், பெரியோர் ஆதரவு.

**கும்பம**
தேக ஆரோக்கியம், காரிய தாமதம், பிரயாண அலைச்சல், சுப செலவு.

**மீனம்**
நிலைமாற்றம், பிறர் உதவி, முயற்சி கைகூடும், கௌரவ நிலை.

(பழைய நேரப்படி கணிக்கப்பட்டது)

- வளவன்.

# பொலிஸார் பக்கச்சார்பு தேர்தல் நடவடிக்கை பாதிப்பு

## சுதந்திர முன்னணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொலிஸ் உத்தியோகத்தர்கள் சிலர் அரசியல் கட்சிகளுக்குச் சார்பாகச் செயற்பட்டு வருவதனால், நீதியானதும், நியாயமானதுமான தேர்தலை நடத்துவதற்குப் பெரிதும் தடையாகவுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி குற்றஞ் சாட்டியுள்ளது.

நாட்டிலுள்ள பல பொலிஸ் நிலையங்களிலும் இடம்பெற்றுள்ள பல்வேறு சம்பவங்களையும் அவ தானிக்கும்போது இந்த விடயம் புலப்படுவதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், இவ்வாறான பொலிஸ் உத்தியோ கத்தர்களின் பக்கச்சார்பான நடவடிக்கைகளைத் தடுக்கும் வகையில் பொலிஸ்மா அதிபர் இந்திரா டிசில்வாவும், தேசிய பொலிஸ் ஆணைக்குழுவும் உடனடியாகச் செயற்படவேண்டும்.

மேலும், அரசியல் கட்சிகளுடன் மிகவும் நெருக் கமான உறவை வைத்திருப்பவர்களே இவ்வாறு பக்கச்சார்பாகச் செயற்பட்டு வருகின்றமையினால அரசியல் கட்சிகளையும் கண்காணிக்க வேண்டும் எனவும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதுவிடயம் தொடர்பாக பொலிஸ்மா அதி பர் இந்தரா டி சில்வா கருத்துத் தெரிவிக்கையில், அரசியல் கட்சிகள் சார்பாகச் செயற்பட்டுவரும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது கடும் நட வடிக்கை எடுக்கப்படும். இது விடயம் தொடர்பாக ஏற்கனவே பொலிஸ் அதிகாரிகளுக்கு அறிவுறுத் தல் விடுக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார். (தி-18)

## விசாரணைகள் விரைவில்

(கொழும்பு)

சட்டவிரோதமாக இத்தாலி செல்ல முற்பட்ட போது குற்றப்புலனாய்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களுக்கு எதிராக தூரித சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என சட்டமா அதிபர் கே.சி.கமலசபேசன் தெரிவித்துள்ளார்.

சுமார் 700 சந்தேக நபர்கள் மீது இத்தகைய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. இவர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க போதிய சாட்சியங்கள் இல்லாத பட்சத்தில் அவர்களை உடனடியாக விடுதலைச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சட்டமா அதிபர் மேலும் தெரிவித்தார். (தி-60.10)

# வடக்கு- கிழக்கில் 22 ஆசனங்கள் தமிழ்க் கூட்டமைப்புக்கு கிடைக்கும்

## மாவை சேனாதிராஜா நம்பிக்கை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வடக்கு-கிழக்கில்மொததமாக 22 ஆசனங்களைப் பெறும் என்ற நம்பிக்கை உருவாகிவருகின்றது என இலங்கை தமிழரசுக் கட்சியின் செயலாளர் நாயகமும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.தேர்தல் மாவட்டத்தின் முதன்மை வேட்பாளருமாகிய மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தத் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 9 ஆசனங்களையும் பெற்றுக கொள்ளும். யாழ்ப்பாண மாவட்டதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இப்போது ஆதரவும் எழுச்சியும் வாக்காளர் மத்தியில் பெருகி வருவதை நேரடியாக நாம் அவதானித்து வருகின்றோம்.

கிழக்கு மாகாணத்தில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஏதாவது மாற்றத்தினை ஏற்படுத்தும் எனக் கருதுகின்றீர்களா? எனக் கேட்ட போது,

கிழக்கு மாகாணப் பிரச்சினை என்பது ஒரு தனிமனிதனது பிரச்சினையாகும். அப்பிரச்சினையில் சம்பந்தப்பட்டவரின் விடயத்தினை தமிழீழ விடுதலைப்புலிகள் மிகவும் கவனமாக விரைவில் கையாள வார்கள், ஆதலால் யாழ்ப்பாண மாவட்ட வாக்காளர்கள் இது பற்றி அலட்டிக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. விடுதலைப்புலிகளின உள்வீட்டுப் பிரச்சினை அது. அதில் தலையிடும் எண்ணம் ஏற்படவில்லை என்றார்.

இத்தேர்தலில் கூடுதலான ஆசனங்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெறும் பட்சத்தில் நாட்டின அரசாங்கத்தினை அமைப்பதில் பங்குகொள்வீர்களா? எனக் கேட்டபோது,

தென்னிலங்கையில் அரசாங்கம் ஒன்றினை அமைப்பதற்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு ஆதரவு வழங்கக்கூடிய சூழ்நிலை உருவாகும் என பத்திரிகைகளிலும், தேர்தல் பிரசாரக் கூட்டங்களிலும் கூறி வருகின்றனர். இருந்த போதிலும் கூட்டமைப்பைப் பொறுத்தமட்டில் தெற்கில் பார் அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என்பது எமது பிரச்சினையல்ல.

அத்துடன் தென்னிலங்கையில் அரசு ஒன்றினை அமைக்க நாம் உதவுவோம் என்ற கேள்வி இப்போது எழமுடியாது. இந்தத் தேர்தலின் பின் அறிவிக்கப்படுகின்ற தீர்ப்பைப் பயன்படுத்தி தமிழ் பேசும் மக்கள் சுயநிர்ணயத்துடன் வாழக்கூடிய நிலையை ஏற்படுத்த வேண்டும். இது குறித்து பின்னர் எழக்கூடிய சூழ்நிலைக்கு ஏற்ப சிங்கள தேசம் என்ன பதில் கூறப் போகின்றது என்பதைப் பொறுத்தே எமது நிலைப்பாடு அமையும் எனக் குறிப்பிட்டார்.

(ந-16)

## தென்னிலங்கையில் யானை மூலம் தேர்தல் பிரசாரம்

(கொழும்பு)

அரசியல் கட்சிகள் தமது தேர்தல் பிரசாரங்களில் யானைகளைப் பயன்படுத்துவதனை சிரேஷ்ட சூழலியலாளர்கள் கண்டித்துள்ளனர். யானைகளை பெரஹராவிற்கு மட்டுமே பயட்டுத்தலாம் என்றும் ஏனைய காரணங்களுக்காக அவற்றைப் பயன்படுத்தக்கூடாதுஎன சூழலியலாளா ஜகத் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், யானைகள் அரசியல் கட்சி ஒன்றின் சின்னமாக இருப்பினும் அவை ஆபத்துக்குள்ளாகிவரும் இனததைச் சேர்ந்தவை. இவற்றை தேர்தல் பிரசாரங்களில் பயன்படுத்தும் அவசியம் இல்லை. அரசியல்வாதிகள் பிரசாரங்களின் போது மக்களை கவர நினைத்தால் அதற்கு வேறு வழிகளைக் கையாள வேண்டும்.

முன்னைய தேர்தலின்போது ஆறுமுகன் தொண்டமானால் வழி நடத்தப்பட்டு வருகின்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவாளர்கள் மலையகத்தில் அவரின் பிரசாரத்தின் போது யானை ஒன்றை வாகனத்தில் ஏற்றி ஊர் வலமாக எடுத்துச்சென்றிருந்தனர்.

தனிப்பட்டவர்களின் யானையை பயன்படுத்த அதிகாரம் கிடையாது. இவை அனைத்தும் தாவர விலங்கு பாதுகாப்பு பணியகத்தில் பதிவுசெயயப்படல் வேண்டும். விலங்குகள் மீது கட்டுப்பாடு செலுத்தும் அளவிற்கு எமக்கு அதிகாரம் கிடையாது என்றார். (தி-06)

## உரிமைகளைப் புதைக்கும் சதிக்கு நாம் ஒருபோதும் விலைபோகக்கூடாது

தமிழ்பேசும் மக்களுக்கு வழிகாட்டக்கூடிய ஒரு விடிவெள்ளியாக நம்பிக்கை நட்சத்திரமாகத் தோன்றியுள்ள ஒரே தலைவர் பிரபாகரன் ஆவார். அவருடைய தலைமையில் நாம் வென்றடையவேண்டிய உரிமையை குழி தோண்டிப் புதைக்க முயலும் சதிக்கு நாம் விலைபோகாதிருக்க உறுதிகொளவோமாக.

இவ்வாறு திருகோணமலை வாழ் மட்டக்களப்பு மக்கள் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தமிழ் மக்களின் பிரச்சினை கூர்மையடைநது ஆயுதப போராட்டம் வளர்வதற்குமுன்னர் அறப்போராட்ட காலத்தில் எம்மிடம வடக்கு-கிழக்கு என்கின்ற பேதம் ஒருபோதும் இருந்ததில்லை. காலத்துக்கு காலம் அழிவுகள் ஏற்பட்ட போதும் எமக்கு உதவிய கரங்களுக்குரியவர்கள் பிரதேசம் கடந்த உணர்வுடையவர்களாகவே இருந்துள்ளனர்.

எமது போராட்டம் தனித்த ஒரு பிரதேசத்தை முன்வைத்து ஆரம்பிக்கப்பட்டதல்ல. ஒட்டு மொத்தமகா தமிழீழப் பிரதேசங்களை வென்றெடுக்கும் ஒரே நோக்கத்துடன் தான எமது நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. அமரர்களான இராசமாணிக்கம், இராசவரோதயம் போன்ற தலைவர்கள் கட்டிக்காதது வளர்த்த ஐக்கியத்தை தனது சுயநலத்திற்காகவும் குறுகிய நோக்கத்திற்காகவும் இராசதுரை அவர்களின் வழியில் காட்டிக் கொடுக்க முனைந்துள்ள துரோக நடவடிக்கை தற்போது நிகழ்ந்துள்ளது. இதனை யிட்டு மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழ் மக்களாகிய நாம் வெக்கித் தலை குனிகிறோம்.

தமிழினத்துக்காக தங்களது உயிரைத் தியாகம் செய்தவர்களின் குருதிகளில் பிரதேசவாதம் இருந்ததா? தமிழ் மக்களின் இனவிடுதலைக்காக தன்னுயிரைத் தியாகம் செய்த அனனை பூபதியின் தியாக உணர்விற்கு நாம் கொடுத்துள்ள விலை இந்தப் பிரதேசவாதம் தானா?

எப்போது நாம் பிளவுபடுவோம்? எப்போது எமது போராட்டம் பின்னடைவுகாணும்? என காத்திருக்கும் பேரினவாத சக்திகளுக்கும் எம்மிடையே இருக்கும் சில குறுகிய மனப்பான்மையுடையோர்க்கும் மகிழ்ச்சி ஊட்டக கூடிய இந்த நிலைமை உண்மையல் விடுதலையை விரும்பும் எம்போன்றோருக்கு தலை குனிவையும் பெரும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

சர்வதேச சமூகம் எமது கோரிக்கையை நியாயமானதென அங்கீகரிக்கக் கூடிய ஒரு சாதகமான சூழல் உருவாகிவரும் இந்நேரத்தில அனைத்தையும் தலை கீழாகப் புரட்டிவிடும் இந்த பிரதேசவாத பிளவுக்கு நாம்முகம் கொடுக்காது நமது ஐக்கியத்தை கட்டிவளர் போமாக. எமது போர்வரலாற்றில் வெற்றியைப் பின்னுக்குத் தள்ளும் எந்தவித சதிக்கும் ஆட்படாது, எமக்கு ஏற்பட்டுள்ள இந்த தலை குனிவை நிமிர வைக்க வேண்டும் என அவ்வறிக்கையில் குறிப்பிட்டப பட்டுள்ளது. (தி-35)

## பவ்ரல் அமைப்பின் உயர்மட்டக் குழு யாழ்ப்பாணம் விஜயம்

(கொழும்பு)

தற்போது வடக்கு-கிழக்கில் நிலவிவரும பதற்றமான சூழ்நிலையின் காரணங்களைக் கண்டறிய 3பேர் கொண்ட குழு ஒன்றை பவ்ரல் அமைப்பு யாழ்ப்பாணத்திற்கு அனுப்பியுள்ளது. 3நாடகள் தங்கயிருக்கும் இக்குழுவினர் இங்குள்ள அரசியல்வாதிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், மதபீடங்கள், சமூக அமைப்புகள் என்பவற்றுடன் பேச்சுக்களை நடாத்துவார்கள்.

இக்குழுவில் டாக்டர் ஜெயன் பெரேரா, விமல் பெர்னாடோ, எஸ்சிவ குருநாதன் ஆகியோர் அடங்குவர். எதிர்வரும் 18ஆம் திகதி வியாழக கிழமை இக்குழு மீண்டும் கொழும்பு திரும்பும்.

கடந்த வாரம் கருணாவிற்கும் புலிகள் தலைமைக்குமிடையில் ஏற்பட்ட பிளவுக்கு முன் அங்கு சென்று திரும்பிய அதிகாரிகள், பவ்ரலின் நீண்டகால அவதானிகள், ஒழுங்கமைப்பாளர்கள ஆகியோரிடையில் நிலவும் அச்ச உணர்வைப் போக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவார்கள்.

எதிர்வரும் ஏப்ரல் 2ல் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தல் கண்காணிப்புக்காக தற்போது வடக்கு-கிழக்கில் தங்கியுள்ள அதிகாரிகளிடையே தற்போதைய பதற்றநிலை காரணமாக அச்சம் நிலவிவருகிறது என பவ்ரல் நிறைவேற்றுப் பணிப்பாளர் கிங்ஸிரெட்றிகோ தெரிவித்தார். மேலும் வடக்கில் தற்போது ஏற்பட்டுள்ள அபிவிருக்கிகள் பற்றி இக்குழவினர் இவருக்கு தெரியப்படுத்துவார்கள். இதன்பின்னரே தமது அடுத்த நடவடிக்கையை ஆரம்பிக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (தி-06)

## கொழும்புத்துறைப் பகுதியில் மண் அகழ்வு தொடர்கிறது

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை, நெடுங்குளம், அரியாலை, முள்ளிப்பகுதிகளில் சட்டவிரோத மண் அகழ்வு இடம் பெற்றுவருகின்றது.

டிராகடர்கள், லான்மாஸ்ரர்கள் மூலம் வகைதொகையின்றி அகழ்ந்து வரும் இந் நடவடிக்கைக்கு பொலிஸாரும் படையினரும் உடந்தையாக இருந்து செயற்பட்டு வருகின்றனர் எனத் தெரியவருகிறது.

இரவு பகலாகத் தொடரும் இம் மண் அகழ்வுப்பணிகளால் அப்பிரதேசங்கள் ஆழமாக்கப்படுவதுடன், மழை காலத்தில் நீர் தேங்கி நிற்கும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

சுவாமியார் வீதி, கண்டி வீதி புங்கங்குளம் சந்தி, அரியாலை புறூடி ஒழுங்கைகள் ஊடாக மணல் ஏற்றிச் செல்லும் வாகனங்களாலும் அவற்றின் இரைச்சல்களாலும் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

(தி-102,51)

## சர்வதேச நாணய நிதியக்குழு மே மாதம் இலங்கை விஜயம்

(கொழும்பு)

இலங்கையின் வறுமை ஒழிப்புத் திட்டத்துக்கு உதவும் முகமாக எதிர்வரும் மே மாதம் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் அடக்கிய குழுவொன்று கொழும்பு வரவுள்ளது.

இலங்கையின் வறுமை ஒழிப்புத திட்டத்திற்காக 80 மில்லியன் அமெரிக்க டொலர்களை சர்வதேச நாணய நிதியம் வழங்கவுள்ளது.

பொதுத்தேர்தலின் பின்னர் இலங்கையில் காணப்படும் வறுமை ஒழிப்பு வளர்ச்சி நிலை பற்றி இலஙகை வரும் இப் பிரதிநிதிகள் முக்கியமாக ஆராயவுள்ளனர்.

(தி-61,10)

## ஊழலுக்கு எதிரான ஐ.நா.சாசனத்தில் கையெழுத்திட சார்லி மகேந்திரனுக்கு அனுமதி

(கொழும்பு)

ஊழலுக்கெதிரான ஐ.நா.சாசனத்தில் கையொப்பமிடுவதற்கு ஐ.நா.விற்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி சார்லி மகேந்திரனுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என வெளிநாட்டமைச்சர் டிரோன் பெர்னாண்டோ தெரிவித்திருக்கிறார். இச சாசனம் ஐ.நா. சபையினால் 2003 ஒக்ரோபர் 31 அன்று அதன் தலைமையகம் அமைந்துள்ள நியூயோர்க்கில் அமைக்கப்பட்டது என வெளிநாட்டமைச்சு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இச்சாசனம் ஊழல் காரணமாக சமுதாயத்தின் ஸ்திர நிலைக்கு ஏற்படும் அச்சுறுத்தல்கள், சமூகத்திற்கு ஏற்படும் பாதிப்புகள் என்பவற்றை தடுப்பதனை நோக்காகச் கொண்டுள்ளது. ஊழலானது தொழில் துறைகளில் பாதிப்பும், ஜனநாயகத்தின் பெறுமதியில் குறைவும் அபிவிருத்தியில் குறிப்பிடத்தக்க அளவு பாதிப்பு ஏற்படவும் சட்ட அமுலாககலில் பிரச்சினையும் ஏற்படக் காரணமாகிறது.

இச் சாசனத்தை உருவாக்கும் போது வியட்னாமுக்கான இலங்கைத் தூதுவர் டி.எல். மென்டிஸ், வியட்னாமில் 2003 ஜூலையிலும் செப்ரெம்பரிலும் நடைபெற்ற 6,7 வது கலந்துரையாடலில் குறிப்பிடத்தக்களவு மாற்றங்களை முன்வைத்திருந்தா. இச்சாசனம் 2003 டிசம்பர் 9-11ஆம திகதிகளில் சம்பிரதாயமுறைப்படி ஒப்பமிடப்பட்ட போது அதில் இலங்கை ஒப்பமிடவில்லை. இந்த சாசனத்தின் பகுதிகளை வாசித்தறிந்து கொள்வதில் சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள், திணைக்களங்களுக்கு கால அவகாசம் போதாமலிருந்தமையினால் தாமதம் ஏற்படடிருந்தது. (த-06)

## சங்காபிஷேகம்

(காரைநகர்)

காரைநகர் வாரிவளவு ஸ்ரீகற்பக விநாயகர் தேவஸ்தானத்தின் சங்காபிஷேகம் எதிாவரும் 20ஆம் திகதி சனிக்கிழமை மு.ப.10.00மணிக்கு நடைபெறவுள்ளது.

பிரதமகுரு சிவஸ்ரீ ப.முத்துக்குமார சுவாமி தலைமையில் நடைபெறவுள்ள இச் சங்காபிஷேக நிகழ்வில், மண்டலாபிஷேகமும் விசேட பூசையும் இடம்பெற்று நண்பகல் மகேஸ்வர பூசையும்நடைபெறவுள்ளன.

இதனைத் தொடர்ந்து பின்னா வசந்த மணடபப் பூசையும், விநாயகப் பெருமானின் வீதியுலாவும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(தி-246)

## பொதுக்கூட்டம்


(யாழ்ப்பாணம்)

யாழ்.புனித மரியாள் வித்தியாலய அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.3.00மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் புதிய நிர்வாகசபைத் தெரிவும் இடம்பெறும் என பாடசாலை அதிபர் எம்.செபஸ்தியாமபிள்ளை அறிவித்துள்ளார்.(தி-3)

# மேற்கிந்திய தீவுக்கெதிராக இங்கிலாந்து அபார வெற்றி



மேற்கிந்திய அணிக்கெதிராக 7 விக்கெற்றுக்களை வீழ்த்திய ஸ்ரீவ் ஹாமிசன் கிறிஸ்கைலின் விக்கெற்றை வீழ்த்திய மகிழ்ச்சியில் ஓடிவரும் காட்சி.



வெற்றிபெற்ற மகிழ்ச்சியில் இங்கிலாந்து அணித்தலைவர் மைக்கல் வோகன், மார்க்கஸ் ரெஸ்கோதிக்குடன்.



மேற்கிந்திய அணியின் துடுப் பாட்ட வீரர் ஜேக்கப்பை ஆட்ட மிழக்கவைத்த ஹாமிசன் மைக்வோஹன் கட்டித்தழுவும் காட்சி.




வெற்றி ஓட்டங்களைப்பெற்ற மைக்கல் வோகன் துடுப்பெடுத்தாடும் காட்சி.



13 ஓட்டங்களுக்கு 7விக்கெற்றுக்களை வீழத்திய காமிசனை அணியினர் பாராட்டுகிறார்கள்.



7 விக்கெற்றினைக் கைப்பற்றிய ஸ்ரீப்ஹாமிசன் ஓடிவரும் காட்சி.



பிறைன் லாராவின் விக்கெற்றினை வீழ்த்திய மகிழ்ச்சியில் மத்தியூ கோகார்ட்.

வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரீவ் ஹாமிசனின் மிகச் சிறப்பான பந்து வீச்சின் மூலம் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி அபார வெற்றிபெற்றுள்ளது. இந்த வெற்றியை அடுத்து நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து அணி 1-0என்ற அடிப்படையில் முன்னிலையில் உள்ளது.

ஜமேக்கா சபீனா பாக். விளையாட்டரங்கில் நடைபெறற இப்போட்டியல் மேற்கிந்தியத் தீவுகள் அணி அதன் முதல் இன்னிங்ஸில் 311 ஓட்டங்களையும் இங்கிலாந்து அணி 339ஓட்ட்ங்களையும் பெற்றன.

இதனபடி போட்டியின் நானகாம் நாளான நேற்று முன்தினம் காலை விக்கெற் இழப்பின்றி 8ஓட்டங்களுடன் இரண்டாவது இன்னிங்ஸைத் தொடர்ந்த மேற்கிந்தியத் தீவுகள் அணி, சகல விக்கெற்றுக்களையும் இழந்து 47ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. மேற்கிந்திய அணி அதன் டெஸ்ட் வரலாற்றில் பெற்ற மிகககுறைந்த ஓட்டங்களாக இது அமைந்தது.

மேற்கிந்திய அணியின் இரண்டாவது இன்னிங்ஸில் 5துடுப்பாட்ட வீரர்கள் ஓட்டம் எதுவும் பெறாமல் ஆட்டமிழந்தனர். மேற்கிநதிய அணிக்கு அதிகூடிய ஓட்டங்களாக ரெட்லி ஜேக்கப் 15ஓட்டங்களையும், பெலன் ஸ்மித் 12ஓட்டங்களையும் பெற்றனர். ஏனைய 9 துடுப்பாட்ட வீரர்களும் இரட்டை எண்ணிக்கையைக் கூடத் தாண்டவில்லை.



பந்து வீச்சில் ஸ்ரீவ் ஹாமிசன் 12.3ஓவர்கள் பந்துவீசி 12 ஓட்டங்களை மாத்திரமே கொடுத்து 7 விக்கெற்றுக்களை வீழ்த்தியமைக் குறிப்பிடத்தக்கது. இவரைத் தவிர மத்தியூ ஹொகார்ட் 2விக்கெற்றுக்களையும், சைமன்ஸ் ஜோன் ஒரு விக்கெற்றினையும் வீழ்த்தினர்.

இதன் அடிப்படையில் மேற கிந்தியத்தீவுகள் அணி இங்கிலாந்து அணியினரைவிட 20ஓட்டங்களே அதிகமாகப் பெற்றிருந்தன இந்த 20ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணி, 2.3ஓவர்களில் வெற்றி இலக்கை மிக இலகுவாக அடைந்தது. துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணித்தலைவர் மைக்கல் வோகன ஆட்டமிழக்காமல் 11ஓட்டங்களையும், மார்க்கஸ் ரெஸ்கோதிக் ஆட்டமிழக்காமல் 6ஓட்டங்களையும் பெற்று வெற்றியினை விரைவு படுத்தினர்.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை, றினிறாட்டில் நடைபெறவுள்ளது.

**ஸ்கோர் விபரம்**

**முதல் இன்னிங்ஸ**

மேற்கிந்தியத் தீவுகள் -311 (86.4 ஓவர்கள்)

இங்கிலாந்து -339 (103.2 ஓவர்கள்)

**இரண்டாவது இன்னிங்ஸ்**

மேற்கிந்தியத் தீவுகள்-47(25.3 ஓவர்கள்)

இங்கிலாந்து-20/0(2.3 ஓவர்கள்)

(தி-68,121)

## ஆஸி.இலங்கை இரண்டாவது டெஸ்ட் இன்று கண்டியில்

இலங்கைக்கான கிரிக்கெற் சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணிக்கும், இலங்கை அணிக்குமிடையிலான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெற் போட்டி இன்று கண்டியில் உள்ள அஸ்கிரிய மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இப் போட்டிக்காக பெயர் இடப்பட்ட இலங்கை அணியின் முதலாவது டெஸ்ட் போட்டியில் விளையாடயிருந்த குமார்தர்ம சேனவின் பெயர் இடம்பெறவில்லை. அவருக்கு பதிலாக 26வயதுடைய இடதுகை சுழல்பந்து வீச்சாளரான ரங்கனை ஹேரத் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளாா.

இதேவேளை, முதலாவது டெஸ்ட் கிரிக்கெற் போட்டியின் போது இலங்கை அணிவீரர்களான சனத் ஜெயசூரிய மற்றும் திலான் சமர வீர ஆகியோருக்கு காயம் ஏற்பட்டிருந்தது. இந்நிலையில் இரண்டாவது டெஸ்ட் போட்டியின்போது இவ்வீரர்களுக்காக மாற்று ஆட்டக்காரர் எவரையேனும் அணியில் சேர்த்துககொள்ள வேண்டிய நிலை ஏற்படலாம் என்பதற்காக ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான சமன் ஜெயந்தவும் இலங்கை அணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளார்.

இதற்கமைய இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெற் போட்டியல் விளையாடவுள்ள இலங்கை அணி வீரர்களின் விபரம் வருமாறு, அணித் தலைவர் ஹஷான் திலகரட்ண, மாவன் அத்தப்பத்து, சனத் ஜெயசூரிய, குமார் சங்ககார, திலான் சமரவீர, மஹேல ஜெயவர்த்தன, திலகரட்ணடில்ஷான், அவிஸ்க குணவர்த்தன, சமிந்தவாஸ், நுவான் சௌரய்யா, நுவான் குலசேகர, முத்தையா முரளிதரன், உப்பிள் சந்தன, ரஙகன ஹேரத், கௌசல்ய லொக்கு ஆராய்ச்சி மற்றும் சமன் ஜெயந்த ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

(தி-68121)

## இரண்டாவது தொடர் இன்று

இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒரு நாள் சர்வதேச கிரிக்கெற் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை ராவல் பிண்டியில் நடைபெறவுள்ளது. இரு அணிகளும் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கிடையில இஸ்லாமபாத் சென்றடைந்துள்ளனர்.

கராய்ச்சியில் கடந்த சனிக்கிழமை நடந்த போட்டியைத் தொடர்ந்து, பநதுவீச்சிலும், துடுப்பாட்டத்திலும் புதிய உத்திகளைக் கையாள, குறிப்பாக பந்துவீச்சில் புதிய உத்திகளைக் கையாள இரு அணிகளும் சிந்தித்து வருகின்றன. முதல் ஒரு நாள் சர்வதேசப் போட்டியில் இரு அணிகளினது பந்துவீச்சும் சிறப்பாக அமையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (தி-121)

## அரங்குகளின் நிர்மாணப் பணி தாமதம் ஒலிம்பிக் போட்டி சியோலுக்கு மாறலாம்?

நான்கு ஆண்டுகளுக் கொரு முறை நடைபெறும் ஒலிம்பிக் விளையாட்டு விழா எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் கிறீஸின் தலைநகர் ஏதென்ஸில் இம்முறை நடைபெறவுள்ளது.

இன்னும் 5மாதங்கள் உள்ள நிலையில் ஏற்கனவே நிறைவு பெற்றிருக்க வேண்டிய பல நிர்மாணப் பணிகள் மிகவும தாமதமாக நடைபெற்று வருவதுடன், இன்னும் அவை தொடர்ந்து கொண்டிருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ள 39அரங்குகளில் இதுவரை 15 அரங்குகள் மாத்திரமே கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 13 அரங்குகளுக்கான நிர்மாணப் பணிகள் 90சதவீதமே நிறைவு பெற்றுள்ளன.

மேலும் 8அரங்குகளில் 80சத வீதமான புனர்நிர்மாணப் பணிகளே பூர்த்தியடைந்துள்ளன. கால்பந்தாட்டப் போட்டிகளுக்கான புதிய அரங்கொன்று 70 சதவீதமே கட்டி முடிக்கபட்டுள்ளது. ஒலிம்பிக் போட்டிகளுக்காக நிர்ணயிக்கப்படும் ரயில் பாதைகளுக்கான நிர்மாணப் பணிகள் பல வாரங்களாக நடைபெறவில்லை. பிரதான அரங்குகளுக்கான கூரையும் இன்னும் பொருத்தப்படவில்லை.

இந்த நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்படாததினால் ஒலிம்பிக் விளையாட்டு விழாவை திட்ட மிட்டபடி ஏதென்ஸில் நடத்த முடியுமா என்பது குறித்து பலர் சந்தேகம் தெரிவிக்கின்றனர். இந்த ஒலிம்பிக் போட்டியை சிட்னி, சியோல் போன்ற நகரங்களுக்கு மாறறுவது குறித்தும் சிலர் ஆராய்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் சர்வதேச ஒலிம்பிக் குழுவின் தலைவர் ஜாக் ரோஜ் மற்றும் அதிகாரிகள் ஏதென்ஸுக்கு விஜயம் செய்து, கிறிஸின் புதிய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த தீர்மானித்துள்ளனர். இதேவேளை கடந்த வாரம் பதவி ஏற்ற கிறிஸின் பிரதமர் கொஸ்டாஸ கர மன்ஸில், ஒலிம்பிக் விழாவுக்கான பொறுப்பான அமைச்சை தனது நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஒலிம்பிக் ஏற்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கே புதிய அரசாங்கம் முன்னுரிமை வழங்குகிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இம்முறை ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் முன் எப்போதும் இல்லாதவாறு இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் நூற்றுக்கணக்கான அமெரிக்க இராணுவத்தினரும் ஆயிரக்கணக்கான கிறிஸ் இராணுவத்தினரும் இணைந்து ஏதென்ஸில் பயிற்சிகளை ஆரம்பத்துள்ளனர். குண்டுகளைச் செயலிழக்கச்செய்வது முதல் கப்பல்கடதத்தல் நடவடிக்கை வரை பல்வகையான பயிற்சிகளில் இவர்கள் ஈடுபட்டுள்ளனா.

பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 8ஆயிரம் கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா, ஸ்பெயின், பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யா ஆகிய நாடுகளைக் கொண்ட பாதுகாப்பு ஆலோசனைக் குழுவை கிறிஸ் அமைத்துள்ளது. அயல் நாடான துருக்கியின் உதவியையும் கிறிஸ் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(தி-121)

# விளையாட்டுச் செய்திகள்

## மெய்வன்மைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வட்டு.திருநாவுக்கரசு வித்தியாலயமும், பிளவத்தை அ.மி.த.க. பாடசாலையும் இணைந்து நடாத்தும் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி, இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30மணிக்கு வட்டு.வீரபத்திரர் சிவன் கோவில் வீதியில் பாடசாலை அதிபர்களான அ.அருணகிரிநாதன், க.நடராசா ஆகியோர் தலைமையில் நடைபெறவுள்ள.

இந்நிகழ்வில் முன்னாள் வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளர் சங்கீத கலாபூசணம் சுகணபதிப்பிள்ளை பிரதம விருந்தினராகவும், மூளாய் சிறுவர் கல்விக்கும், பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனத்தின் இயக்குநர் திருமதி இ.பொன்மலர், வைத்திய கலாநிதி க.முருகேசபிள்ளை, வலிகாமம் கலவி வலய சேவைக்கால சமூகக்கல்வி ஆலோசகர் நா.அரியபுத்திரன், ஓய்வு பெற்ற அதிபர் வே.தம்மையா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(தி)

* * *

(சுதுமலை)

சுதுமலை சிந்மய பாரதி வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை மாலை 2.00 மணிக்கு பாடசாலை மைதானத் திடலில் இடம்பெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் த.தர்ம ஜோதி தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில், பிரதம அதிதியாக வலிகாமம் கல்வி வலய முகாமைத்துவப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரனும், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் எஸ்.கே.சண்முகநாதனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(தி-252)

* * *

(வேலணை)

வேலணை சரஸ்வதி வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பாடசாலை அதிபர் ச.பாஸ்கரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப் போட்டிக்கு தீவக வலய கல்விப்பணிப்பாளர் வேணுகோபாலதாசன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார். 1995ஆம் ஆண்டின் இடப்பெயர்விற்கு பின்னர் 2003ம் ஆண்டு மீண்டும் இப் பாடசாலை இயங்கத் தொடங்கியது குறிப்பிடத்தக்கது.

(தி-47)

# தமிழர்களின் வரலாற்றில் கறை படிந்த காலகட்டம்

தமிழர்களின் நெஞ்சை எரிக்கின்ற நிகழ்வுகள் தொடர்கதையாகி விட்டன. கடந்து செல்லும் இந்தச் சில நாட்கள், ஈழத்தமிழர்களின் தூக்கமற்ற இரவுகளாகவும், இனந்தெரியாத துன்ப உணர்வுள்ள பகற்பொழுதுகளாகவும்,



முகட்டை வெறித்துப் பார்க்கும் ஒருவித இருளடைந்த எதிர்காலத்தின் அறிகுறி போலவும் கடந்து செல்கின்றன.

'தமிழனைக் காட்டிக் கொடுத்த தமிழன்' என்ற கதை பழைய கதைதான், ஆனால், தமிழனுக்கெதிராகத் தமிழனே உரிமை கேட்டு, இறுதியாகக் கனிந்து வந்துள்ள பெரும்பான்மைத் தமிழினப் பலத்தை மீண்டும் கூறுபோட, ஒரு தமிழனே முடிவெடுத்துள்ளமை, ஈழத்தமிழர் நெஞ்சங்களில் தாங்க முடியாத சோகத்தையும் வேதனையையும் உருவாக்கியுள்ளது.

"இது பொய்யாக இருந்துவிடக் கூடாதா? யார் எதிரிகள் என்பதைப் பரீட்சிக்க நாம் அரங்கேற்றிய நாடகம் என்று கருணா கூறி, மீண்டும் தலைவருடன் வந்து இணைந்து விடமாட்டாரா? கருணா சற்று இறங்கிவந்து பொதுமன்னிப்பை ஏற்றுக்கொள்ள மாட்டாரா? ஈழத்தமிழர்களுக்கெல்லாம் பலத்த நம்பிக்கை தர கருணா கனிவான இரு வார்த்தை சொல்லிக் களத்தில் தலைவரைச் சந்தித்து சச்சரவுகளுக்குச் சமரசம் செய்து கொள்ள மாட்டாரா?" என்று ஒவ்வொரு ஈழத் தமிழனின் நெஞ்சிலும் ஆயிரமாயிரம்கேள்விகள்; ஏக்கங்கள்.

### கறைபடிந்த காலகட்டம்

தியாகம் செய்தது மொத்தத் தமிழினமும் தான். இதில் எந்தப் பகுதி அதிகம் செய்தது என்று பங்கு போட்டுப் பார்க்கும் நேரம் இதுவல்ல. 'நாமார்க்கும் குடியல்லோம்' என்பது மொத்தத் தமிழினத்திற்குமான ஒரு விருதுவாக்குத்தான். இதிலே இரண்டு தமிழினக் குடிகள் தமக்கிடையே பலப் பரீட்சை பார்க்க கருணா என்ற ஒரு தமிழ்மகன் களம் அமைத்துக் கொடுத்திருப்பது தமிழர் வரலாற்றில் கறை படிந்த காலமாக என்றும் பதிந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

கருணா கூறியிருப்பது போல், வடக்குக்கு மட்டும் அசிக உரிமைகளைப் பெறுவது தேசியத் தலைமையின் விருப்பாக இருந்திருந்தால், வடக்கை மட்டும் தனியாகப் பிரித்துப் பெறுவதற்கு இந்த 20 வருடகால ஈடிணையில்லா இழப்புக்கள் அவசியமாகியிருக்காது. வடக்கை மட்டும் தனியாகப் பிரித்து, தமிழர் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு கடந்த காலத்தில் பல வாய்ப்புக்கள் தானாக உவந்தளிக்கப்பட்டன. அத்தனை வாய்ப்புக்களையும் துச்சமென மதித்துத் தூக்கியெறிந்து, பல ஒப்பந்தங்க்ளையும் நிராகரித்து, இத்தனை காலம் போராடி, இறுதியில் இப்போது இடைக்கால நிர்வாக அலகுவரை இழுத்து வந்ததற்கு ஒரேயொரு காரணம் "கிழக்கும் இணைந்த விடுதலை வேண்டும்" என்ற ஒற்றை நோக்கம் மட்டுமே! இதில் எந்தச் சந்தர்ப்பத்திலும் இரண்டாம் கருத்து தேசியத் தலைமைக்கு இருந்ததே கிடையாது.

### தேசியத் தலைவரின் நம்பிக்கை

கிழக்கில் போராட்டத்தைப் பலப்படுத்த, விடுதலைப் புலிகள் இழந்தவை கொஞ்ச நஞ்சமல்ல. இந்த இழப்புக்கள் பற்றி கருணாவைவிட அதிகமாய்த் தெரிந்தவர் யாரும் அந்த அமைப்பிலேகூட இல்லை. கிழக்கில் வாழும் தமிழர்களின் விடுதலையை சேர்த்தே பெற்று விடுவது மட்டும்தான் 'மரபுவழி வடகிழக்குத் தமிழர் தாயகம்' அமைக்க ஒரேவழி என்பதில் தேசியத் தலைவர் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருந்தார் என்பதை கருணா உட்பட யாரும் மறுக்க முடியாது.

ஈழத்தில் உதித்துச் செயற்பட்ட எந்தவொரு இயக்கமும், கிழக்கில் காலூன்றிச் செயற்பட முடியாமற் போனமைக்கு, "கிழக்கில் இருந்த யதார்த்தமான களநிலைச் சிக்கல்களே" காரணம். முஸ்லிம்-சிங்களம்-தமிழ் என்ற மும்முனை மக்கள் களம், 'புட்டும் தேங்காய்ப்பூவும்' போல் முஸ்லிம்-தமிழ் கிராமங்களின் பூகோளவியற் கட்டுமானம், எல்லைப்புற கட்டாயக் குடியேற்றங்கள், எல்லைகளைப் பாதுகாப்பதிலுள்ள இராணுவ மற்றும் பாதுகாப்புச் சிக்கல்கள் இவற்றுடன் கிழக்கில், இயங்கக்கூடிய கிளை அமைப்பினருக்கான நிர்வாகத்தை நெறிப்படுத்திப் பேணுவதில் இருக்கக்கூடிய இழுபறிகள், போராளிகளையும் ஆயுதங்களையும் கிழக்கிற்கு அனுப்புவதிலும் திரும்ப எடுப்பதிலும் இருக்கக்கூடிய இராணுவக் காவலரண் சிரமங்கள் என்று இந்தப் பட்டியல் நீண்டுசெல்லும்.

இருந்தும், விடுதலைப் புலிகள் என்ற அமைப்பினர் மட்டும் பலத்த சிரமங்களுக்கும், சிக்கல்களுக்கும் முகம்கொடுத்தும், எந்தக் காரணம் கொண்டும், எத்தனை இழப்புக்கள் நேர்ந்தும், கிழக்கிலிருந்து பின்வாங்காது, கிழக்கின் தமிழர் தாயகத்தை காங்கொணா இமப்புக்களுக்கு மத்தியில் பாதுகாத்து, விடுவித்தார்கள். விடுதலைப் புலிகள் அமைப்பினர் கிழக்கில் சீரிய நிர்வாகத்தின் கீழ், கட்டுக்கோப்பாக எல்லைகளைப் பாதுகாத்து, தமிழர்களின் பாரம்பரிய தாயகத்தை மீட்டெடுக்க முயற்சித்திருக்காவிடில், இன்று கிழக்கில் மூன்றிலொரு பகுதிகூட தமிழருக்கு மிஞ்சியிருக்க வாய்ப்பில்லை என்பதை அத்தனை தமிழர்களும் ஏற்றுக் கொள்வார்கள்.

> இணையத் தளத்தில் வெளியான கனடாவி லிருந்து குயின்ரஸ் துரைசிங்கம் எழுதிய "தமிழர் நெஞ்சு கனக்கிறது" என்னும் தலைப்பிலான கட்டுரை வலம்புரி வாசகர்களுக்காக இங்கே தரப படுகிறது.

### கிழக்கில் கருணாவின் பங்களிப்பு

இத்தகைய சீரிய நிர்வாகத்திற்குக் கருணாவின் பங்களிப்பு பாரிய அளவில் இருந்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. கருணா என்ற ஒரு தனிமனிதனால் மட்டுமல்ல, தேசியத் தலைமையின் கீழ் உருவாக்கப்பட்டிருந்த சீரிய நிர்வாகத்தின் கீழ் மட்டுமே இது சாத்தியமானது என்பது நிதர்சனமான உண்மை. இதற்குப் பங்களித்த பலரில் கருணாவும் குறிப்பிடத்தக்க ஒருவர் என்பது நிஜம்.

### தவறான நேரம்

கருணா பிரிந்து செல்ல எண்ணியிருப்பதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். சிலவேளை அது நியாயமானதாகக் கூட இருக்கலாம். அவர் அப்படி நினைத்ததோ, முடிவெடுத்ததோ, செயற்பட்டதோ கூட துரோகமுமல்ல. அது ஒரு தனிமனித உரிமை தான். ஆனால், கருணா எடுத்த அந்த முடிவை, இத்தனை காலப் போராட்டத்தின் இறுதியில், ஈழத் தமிழர்களுக்கு ஆகக்குறைந்த விடுதலையின் அறிகுறிகள் தென்படும் நிலையிலுள்ள தற்போதைய சமாதானச் சூழலில், கருணா எடுத்திருப்பது தான் துரோகம். கருணா எடுத்த முடிவு துரோகமானதல்ல, ஆனால் எடுத்திருக்கின்ற நேரம் துரோகமிழைத்தமைக்கு சமனானது.

கருணா இழைத்துள்ள இந்த 'தவறான நேரம்' கருதிய துரோகம் விடுதலைப் புலிகளுக்கோ அதன் தலைமைக்கோ எதிரானதல்ல. கருணா செய்துள்ள 'தவறான நேரம்' கருதிய துரோகம் மொத்தத் தமிழினத்தின் விடுதலைக்குமே எதிரான துரோகமாகவே கணிக்க வேண்டியுள்ளது.

### போராளிகளின் தியாகம்

கருணா என்ற ஒரு தனிமனிதன், கிழக்கிற்கு மட்டுமல்ல வடக்கிற்கும் சேர்த்து நிறையவே தியாகம் செய்துள்ளார். அதற்கு அத்தனை தமிழர்களும் கடமைப்பட்டிருக்கிறோம். அதேவேளை, வே.பிரபாகரன் என்ற ஒரு தனிமனிதன் மட்டுமல்ல, அவருக்குப் பின்னே அணிவகுத்துள்ள அத்தனை போராளிகளும் கூட, அதேயளவு தியாக சிந்தையுடனேயே இன்றுவரை தமிழீழத்தின் வடக்கும் கிழக்கும் இணைந்த ஒட்டுமொத்தத் தாயகத்தின் வெற்றிக்காக நிறையவே தியாகம் செய்துள்ளார்கள்.

இதில் யாருடைய தியாகம் நிறை கூடியது என்று படியிலிட்டு அளந்து பார்க்கும் நேரம் இதுவல்ல. கருணா உட்பட, அத்தனை போராளிகளின் குருதியிலும் தியாகத்திலும் உயிரிலும் எழுதப்பட்டதே 'தற்போது மலர்ந்து வருகின்ற நிரந்தர சமாதானம்' இந்த ஒரு எல்லையைத் தொடுவதற்கான பயணமாகவே கடந்த பல வருடங்களாக எல்லோரும் ஒன்றிணைந்து முள்ளிலும் கல்லிலும் ரணம் சிந்திப் போராடினோம். எல்லைக்கு அருகில் வந்து நின்று, எல்லையைத் தொடுவது நீயா நானா என்று போட்டி போட நினைப்பது அல்லது எல்லையை இருவரும், இருவேறு நேரத்தில் தொடுவோம் என்று அங்கே வாளெடுத்துப் போர் தொடுப்பது, மொத்தத் தமிழினத்தின் நிரந்தரக் கனவிலும் நம்பிக்கையிலும் மண் அள்ளிப்போடும் முயற்சியாகவே முடிந்து விடும்.

### பிரதேசவாரிப்பிரச்சினை

கிழக்கை மட்டும் வென்றெடுக்கும் தனியான போராட்டமோ, வடக்கை மட்டும் வென்றெடுக்கும் தனியான போராட்டமோ, தமிழினத்தின் ஒட்டுமொத்த வெற்றியைப் பெற்றுத் தரப்போவதில்லை. இது அவசியமற்ற ஒரு பிரதேசவாரியான உணர்வுப் பிழம்பு மட்டுமே. இந்த அவசியமற்ற குழப்பநிலை, எதிரிகள் பாசறையைப் பலப்படுத்தவே வழியமைக்கும் என்பதை எந்தத் தமிழனும் மறந்து விடக்கூடாது.

இப்போது எழுந்துள்ள தமிழனுக்கெதிரான தமிழனின் போராட்டம் யாருக்குமே நன்மை பயக்கப் போவதில்லை. இதிலே கருணா என்ற ஒரு தனிமனிதனைச் சுற்றி நின்று சுட்டுவிரல் காட்டி, குற்றப்பத்திரிகை வாசிப்பதை நிறுத்தி, ஒட்டுமொத்தத் தமிழினமும் இணைந்து, அழுத்தம் கொடுத்து, தேசியத்



தலைமையுடன் கருணா நேரடியாகச் சந்தித்து, சச்சரவுகளைப் பேசித் தீர்த்துக் கொள்ளும் ஒரு ஜனநாயக மரபை உருவாக்கிக் கொடுப்பதே நடைமுறைச் சூழலுக்கு உகந்ததாகப் படுகிறது.

### ஊடகங்களின் பணி

சர்வதேச ஊடகங்கள், இந்த இழுபறிகளை சுயலாபங்களுக்காகத் தவறாகப் பிரசாரம் செய்யாது, சூழ்நிலை கருதி அமைதி காப்பது மிகவும் அவசியமானது. இன மத தலைமைகளுடன் கிழக்கிலும் வடக்கிலுமுள்ள அறிவுஜீவிகளும், புலம்பெயர் நாடுகளிலுள்ள நலன்விரும்பிகளும் ஏனைய வெளிநாட்டு பிரதிநிதிகளும் அத்துடன், அனைத்து உள்நாட்டு பிறநாட்டு ஊடகங்களும் கருணாவை மீண்டும் தேசியத் தலைவருடன் சமரசம் செய்துகொண்டு, தற்போது கனிந்துவந்துள்ள இறுதிச் சந்தர்ப்பத்தை, மொத்தத் தமிழினத்தின் நிரந்தர நன்மை கருதி, ஏற்றுக்கொள்ள வழிசெய்யுமாறு அழுத்தம் கொடுப்பதே அவசியமான பணியாக விரிந்து கிடக்கிறது.

மட்டக்களப்பு ஆயரும், கிழக்கின் அறிவுஜீவிகள் பலரும் இந்தப் பணியை ஆரம்பித்துள்ளார்கள். இதற்கு அனைவரும் பூரண ஆதரவு கொடுத்து, மீண்டும் ஒன்றுபட்ட வடக்கும் கிழக்கும் இணைந்த தமிழர்களின் மரபுவழித் தாயகத்தை உறுதிசெய்ய இணைந்து குரல் கொடுப்போம். அதற்கான வழி சமைப்போம். ★

## இராணுவத்திலிருந்து தப்பிய 112பேர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

இராணுவத்தில் இருந்து தப்பியோடிய 112 பேரையும், குற்றச் செயல்களில் ஈடுபட்டுவரும் வேறு சிலரையும் ஆயுதங்களுடன் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தல், சுவரொட்டிகளை ஒட்டுதல், ஆட்கடத்தல் மற்றும் கொலை, கொள்ளைச் சம்பவங்களுடன் இவர்கள் தொடர்பு பட்டவர்களாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இதுகுறித்துப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜயந்த விக்கிரம பெரேரா கருத்துத் தெரிவிக்கையில்,

இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர்கள் எனத் தெரிவிக்கப் படும் 112 பேரையும் பொலிஸார் கைதுசெய்துள்ளதுடன், அவர்களிடம் இருந்து கைத்துப்பாக்கிகளையும் கைப்பற்றியுள்ளனர்.

இவர்கள் மீதான விசாரணைகளைக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தீவிரமாக மேற்கொண்டு வருவகின்றனர் என்றார்.

(தி-10,60)

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
சி.பத்மநாதன்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

74

## நான்காம் பகுதி

### முக்குவர் சட்டம்

## 1.மட்டக்களப்பு தேசம்

### மாகோனும் வன்னிமைகளும்

மாகோன் , சுகதிரன் ஆகிய இருவரும் ஏக காலத்தவர்; ஒருவருக்கொருவர் அனுசரணையாளர்கள் . மாகோன் தோப்பாவை என்னும் பொலநறுவை யிலிருந்து அரசு புரிந்தவன். சுகதிரன் மட்டக்களப்பு தேசத்தின் அதிபனானவன். அவர்களின் உறவுகள் மேலாட்சி புரியும் அரசன் ஒருவனுக்கும் பிராந்திய அரசனொருவனுக்கும் இடையிலான உறவுகளைப் போன்றவை. மாகோனுக்குப் பின் தோப்பாவை இராசதானி என்ற நிலையை இழந்து விட்டது. அங்குள்ள அரச மாளிகைகளும் கோயில்களும் பாழடைந்தும் இடிந்து வீழ்ந்தும் மண்மேடுகளாயின. கிழக்கிலங்கைக் கரையோரப் பகுதிக்கப்பால் அடர்த்தியான காடுகள் வளர்ந்தன. அந்தக்காலத்தில் மட்டக்களப்பிலிருந்த வன்னிமைகள் ஒவ்வொன்றும் சுதந்திரமாகவே இயங்கி வந்தன என்று கொள்ளலாம்.

சுகதிரனுக்குப் பின் நெடுங்காலஞ் சென்ற பின்பு சுகதிரனுடைய வம்சாவழியினர் மட்டக்களப்பை நான்கு பிரிவுகளாகப் பிரித்து வன்னிமைகளாக ஆட்சி புரிந்தன என்ற குறிப்பு வன்னிச் சிற்றரசுகளின் உற்பத்தி பற்றிக் கேறோஸ் பாதிரியார் கூறுவனவற்றைச் சில அம்சங்களில் ஒத்திருக்கின்றது. போர்த்துக்கேய வரலாற்றாசிரியர் ஏறாவூர், பழுகாமம், சம்மாந்துறை என்னும் வன்னிமைகளையே குறிப்பிடுகின்றார். ஆனாற் தமிழ் நூலானது மட்டக்களப்பு ,மண்முனை,வடக்கு மண்முனை, உன்னரசகிரி(பாணமை) என்னும் பிரிவுகளில் உற்பத்தி பற்றிக் கூறுகின்றது. பிராந்திய நிர்வாகத்தை மேற்பார்வை செய்கின்ற திக்கதிபரின் (திசாவை) பதவி, வன்னிமைப்பதவி என்பவற்றின் வேறுபாடுகள் பற்றிய தெளிவான விளக்கமின்மை காரணமாக வன்னிப் பிரிவுகளின் உற்பத்தி பற்றிய ஐதீகங்கள் உருவாகியுள்ளன போலத் தெரிகின்றது. மாகோன் வன்னிமைகளின் உற்பத்திக்குப் பொறுப்பாகவிருந்தான் என்று கொள்வதும் ஒரு பொருத்தமான முடிபாகாது. ஒரு மத்திய மயமான ஆட்சிமுறை சீர்குலைந்தமையின் பயனாகவே 13ஆம் நூற்றாண்டிலே குறு நிலை அரசுகள் தோன்றின என்ற சிந்தனை முற்காலங்களில் இலங்கையில் நிலவிய முடியாட்சி முறையானது ஒரு மத்திய மயமான ஆட்சிமுறை என்ற தவறான கருத்தின் அடிப்படையில் எழுந்தவொன்றாகும்.

முடியாட்சியில் அமைந்த மத்திய மயமான ஆட்சிமுறை என்பது புரதான காலத் தென்னாசிய வரலாற்றைப் பொறுத்தவரையில் ஒரு அனர்த்தமாகும். மாகோனுடைய ஆட்சி ஏற்பட்ட காலத்தில், மட்டக்களப்பிலே ஒரு பிராந்திய நிர்வாக அமைப்பும் சிறு நிர்வாகப் பிரிவுகளும் ஏற்கனவே அமைந்திருந்தன என்பதையே மாகோனைப் பற்றிய கதைகள் உணர்த்துகின்றன. மாகோனுடைய காலத் தில் மலையாள முக்குவரின் படைத்தலைவர் சிலர் வன்னிமைப் பதவியைப் பெற்றனர் என்ற கருத்து மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்தின் மூலமாக அழுத்தம் பெறுகின்றது. அதிலே வன்னிமை தொடர்பாக மேல்வரும் பாடல்கள் உள்ளன.

வன்னிபங் குலவரிசை முட்டிகூற மகிழ்ச்சி கொண்டு
எழுந்திடுன் மரபும் நாடுமெந்த
மன்னருன்னை வன்னிபமாய் வகுத்ததென்றும்
மானிலத்திலெங்கள் முன்னோர் வாழ்ந்தவூரும்
துன்னுபுகழ் கோத்திரமும் தொன்று தொட்டுத்
துணையரசன் பேருருஞ் சொன்னாலிந்த
பன்னுபுகழ் சபையோர்கள் மகிழக்கூறிப்
பங்கு பெறு மறியாயானாற் பாவமாமே

அறியாதா னிச்சபைக்கு அகலநிற்பான்
பரன்றோழும் பேர் பழிப்புரைப் பாரறைவே னெங்கள்
நெறிதவறார் சுயநாடு காளிகட்டம் நீர் குலமே
படையாட்சி யுழுதுண்டோர்
வெறிகமழு மகாலிங்க வாசனெங்கள் திறத்தோரைப்
படைத்துணைக்குத் தலைமையாக்கி
குறியறியந்து வன்னிபங் குலமே என்றும்
குகப்பட்டத்தரசு கொண்டோனானே.

இப்பாடல்கள் திருப்படைப் பத்ததியில் உள்ளவை. அவை முற்காலங்களிலே கொக்கட்டிச் சோலையில் தேர்திருவிழாவின் முடிவிலே பங்கு கொடுக்கும் வேளையிலே படிக்கப்பெற்றவை. அப்பாடல்கள் மண்முனைப்பற்று வன்னிபங்களின் உற்பத்தி பற்றிய மரபு வழிக் கதையைப் பிரதிபலிக்கின்றன. அவர்கள் குகன் குலத்தவர்; முக்குவர்; ஆதியில் அவர்களின் முன்னோர்கள் மலையாள தேசத்துக் காளி கட்டத்தில் இருந்து வந்தவர்கள்; லிங்க வழிபாட்டை மேற்கொண்ட அரசனின் படைத்துணைவராக அவர்கள் இங்கு வந்தவர்கள் . அவர்களின் தலைவர்களுக்கு வன்னிமை என்னும் பட்டத்தை அரசன் வழங்கினான். இவையனைத்தும் முக்குவர் வன்னிமையின் உற்பத்தி பற்றி நிலவி வந்துள்ள மரபுவழிக்கதையின் அடிப்படையான அம்சங்களாகும். இவற்றில் வரலாற்றுச் செய்திகளைப் பொறுத்தவரையிலே எதுவிதமான தடுமாற்றங்களும் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. கலிங்கமாகன் 12,000 கேரளர் சகிதமாகப் படையெடுத்து வந்து பொலனறுவை நகரத்தைக் கைப்பற்றினான் என்று மகாவம்சம் கூறுகின்றமையும் இங்கு கவனித்தற்குரியது. மாகோன் தோப்பாவையைக் கைப்பற்றி அதன் பகுதிகளைப் படையாட்சி வன்னியருக்குப் பகுந்து கொடுத்தானென்றுஞ் சொல்லப்படுகின்றது. மாகனுடைய ஆட்சிக்காலத்தில் மட்டக்களப்பிலே முக்குவர் ஆட்சி அதிகாரங்களையும் , நில மானியங்களையும் மேலோங்கிய செல்வாக்கினையும் பெற்றுக் கொண்டனர் என்று கொள்ளலாம்.

### கண்டி இராசதானியும் வன்னிபங்களும்

வன்னியர் சுயாட்சி அதிகாரம் கொண்ட சிற்றரசராக விளங்கினர். நிர்வாகம், நீதி பரிபாலனம், வேளாண்மை, ஆலயத் தொழும்புகள் என்பன பற்றிய ஏற்பாடுகளை அவர்கள் கண்காணித்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் படைகளை வைத்திருந்தனர் .17ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் முதலாகக் கிழக்கிலங்கை வன்னிமைகள் மீது கண்டி அரசரின் மேலாதிக்கம் ஏற்படலாயிற்று

(தொடரும்

## கொழும்புத்துறைப் பகுதியில் வெடி பொருட்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறைப் பகுதியிலுள்ள தனியார் வீடொன்றின் கிணற்றினுள் இருந்து 250ற்கும் அதிகமான வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

அண்மையில் மீட்கப்பட்ட இவ் வெடிபொருள் தொகுதிகளில் வெடிக்காத நிலையிலான எறிகணைகள், கைக்குண்டுகள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

மேறபடிப் பகுதியிலுள்ள வீடொன்றின் கிணற்றை இறைத்துத் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது இவ் வெடிபொருட்கள் காணப்பட்டன.

இது பற்றிய "ஹலோட்ரெஸ்" வெடிபொருள் அகற்றும் குழுவினருக்கு. அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து அங்கு வந்த அவர்கள் இவ் வெடி பொருட்களை மீட்டெடுத்துள்ளனர்.

(தி-35)



வடமராட்சி வலயப் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்படட கணித விஞ்ஞானப் போட்டிகளின் பரிசளிப்பு விழாவை யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடாதிபதி எம். நடராஜசுந்தரம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதனைப் படத்தில் காணலாம்.



பருத்தித்துறை தட்டாதெரு மெ.மி.த.க பாடசாலை வருடாந்த விளையாட்டுப்போட்டி நிகழ்வில் அதிபர் ரீ. சந்திரசேகரம் உரையாற்றுவதையும், அருகில் பிரதமவிருந்தினர்களான கிராம உத்தியோகத்தர் எஸ். ரவீந்திரன் மற்றும் டாக்டர் எஸ்.எஸ். முத்துக்குமாரு ஆகியோர் அமர்ந்திருப்பதனையும் படத்தில் காணலாம். (படங்கள்: பரு.நிருபர்)



அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டியில், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தெல்லிப்பழைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் கா.சந்திரபாலன் போட்டியை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைப்பதையும், அருகில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட கலாநிதி திருமதி பூ.சிவலோகநாதன் மற்றும் பாடசாலை அதிபர் கு. ஜெகநாதன் ஆகியோர் நிற்பதனையும் படத்தில் காணலாம்.

# தோள் மூட்டுப் பிரச்சினைக்கு அதிநவீன அறுவைச் சிகிச்சை

## மருத்துவ விளக்கம்

மனிதனுக்கு தோள் கொடுக்கும் நிஜமான தோழன் - தோள்மூட்டு தான். ஏனெனில், மனித உடலின் மிக முக்கியமான பகுதிகளில், தோள்மூட்டும் ஒன்று. கைகளின் இயக்கத்திற்கும், சுமையைத் தூக்குவதற்கும் தோள்மூட்டுதான் உதவுகிறது.

### மனிதனின் இயக்கம் பாதிப்படையும்

தோள்மூட்டில் காயம் ஏற்பட்டால் அது மனிதனை இயங்கவிடாமல் முடக்கிப் போட்டு விடுகிறது.

தோள்மூட்டின் உட்பகுதியில் ஏற்படும் நோய்களுக்கு நுண்துளையிட்டு துல்லியமான அறுவை கிசிக்சை செய்யும் நவீன சிகிச்சை முறை இதுவரை நமது நாட்டில் இல்லாமலிருந்தது. மேற்கத்திய நாடுகளிலும் 10 வருடங்களுக்கு முன்னர் வரை இதே நிலைமைதான்.

இப்பொழுது தோளமூட்டு வலி, தோள் மூட்டு இறக்கம், தோள் மூட்டு தசை இறுக்கம் என்று எந்த பிரச்சனை என்றாலும் அதைச் சுலபமாக செய்துவிட முடிகிறது. முன்பிருந்த தோள் மூட்டு அறுவை சிகிச்சை துளை மூலம் 10 சதவீகித அளவிற்கே நோயை குணப்படுத்த முடிந்தது. இப்போதோ 100 சதவீதம் தோள்மூட்டுத் தொடர்பான பிரச்சினைகளைச் சரிசெய்துவிட முடிகின்றது.

### அறுவை சிகிச்சை

இதற்குத் தற்பொழுது 'கீஹோல் சர்ஜரி' என்னும் அதிநவீன அறுவை கிசிச்சை முறை கடைப்பிடிக்கப்படுகின்றது. நவீன அறுவை சிகிச்சை என்றவுடன் மிகப்பெரியதாக இருக்குமோ என்று கருதிவிட வேண்டாம். காலையில் வந்தால் சிகிச்சை முடிந்து மாலையில் வீடு திரும்பிவிடலாம்.

தோள்மூட்டின் உட்பகுதியில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளில் முதன்மையானவை மூட்டு எலும்பு உராயுதல். இந்த பாதிப்பின்போது எலும்பு சற்று கூர்மையாகிவிடும். இதனால் மூட்டு எலும்பும், தசையும் உராய்ந்து மிகக் கடுமையான வலி ஏற்படும். கைகளை மேலே தூக்குவதும், சட்டை மாட்டுவதும் கூட கடினமாக இருக்கும்.

இப்படிப் பாதிக்கப்பட்ட மூட்டு எலும்பை கீஹோல் சர்ஜரி நவீன சிகிச்சை மூலம் எளிதாக சரிசெய்துவிடலாம். கூர்மையான எலும்பை இலகுவாக்கி தசை அசைவதற்கு ஏற்ப இடம் இருக்கும்படி செய்துவிட்டால் மூட்டு எலும்பு உராய்வதற்கு முழுமையான நிவாரணம் கிடைக்கும்.

### யாருக்கு அதிகம் வரும்

தோள்மூட்டு மூட்டு எலும்பு இறுக்கம், சர்க்கரை வியாதி உள்ளவர்களுக்கு அதிகம் வரும். இல்லாதவர்களுக்கும் வரவாய்ப்புண்டு.

பொதுவாக சுமை தூக்குவோர், எலும்பு பலகீனமானோர், விபத்துகளால் தோள்மூட்டில் காயம் ஏற்பட்டவர்கள் பெரும்பாலும் தோள் மூட்டில் மூட்டு நோய்களால் அவதிப்படுவார்கள்.

சிலருக்குத் தோள்மூட்டுத் தசை மட்டும் இறுக்கமடைந்து கடும் வலியை ஏற்படுத்தும். இது யாருக்கு வேண்டுமானாலும் வரலாம். இதையும் கீஹோல் சர்ஜரியினால் முழுமையாக குணப்படுத்திவிடலாம்.

'இவர்களுக்குத் தோள்மூட்டுப் பகுதி மட்டும் மரத்துப் போகும் விதத்தில் ஒரு ஊசி போடப்படும். பின், ஒரு சின்னப் பேனா போன்ற கருவியை தோள்மூட்டுக்குள் செலுத்தி ஸ்க்ரீனைப் பார்த்துக்கொண்டே எந்த இடத்தில் பாதிப்பு இருக்கிறது என்பதனை துல்லியமாக அறிந்து சிகிச்சை அளிக்கலாம். எலும்பையோ, தசையையோ இச் சிகிச்சையில் அறுப்பது இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கூடைப்பந்து, கைப்பந்து, கிரிக்கெற் விளையாட்டு வீரர்களுக்கு அவர்களது ஆட்டத்தின் தன்மை காரணமாக அடிக்கடி தோள்மூட்டில் காயங்கள் ஏற்படும். இவர்களில் சிலருக்கு தோள்மூட்டு விலகிவிடும். அதையும் கீஹோல் சர்ஜரி மூலம் சரிசெய்து உள்ளே வைத்துவிடலாம். சிலருக்கு மீண்டும் மீண்டும் தோள்மூட்டு விலகிவிடும். இவர்களும் இந்த சிகிச்சையை மேற்கொள்ளலாம்.

கிரிக்கெற், பேஸ்பால் போன்றவற்றில் தொடர்ந்து சில வருடம் பந்து வீச நேர்ந்தால் அவ்விளையாட்டு வீரர்களுக்கு நாளடைவில் தோள்மூட்டு தசை விரிவடைந்து கொண்டே போகும். ஒரு கட்டத்தில் வலி கடுமையாகி வேதனையைத் தரும். சரியாக பந்து வீச வராது.

சிலர் தோள்மூட்டில் கல்சியம் அதிகம் சேர்ந்து பயங்கர வலியால் அவதிப்படுவார்கள். உடலில் வேறு எங்கும் இப்படி கல்சியம் அதிகம் சேர்வதில்லை. இது ஏன் என்பது மருத்துவத்திற்கே புரியாத புதிராக இருக்கின்றது.

தோள்மூட்டில் இவ்வாறு கூடுதல் கல்சியம் சேரும் போது தாங்க முடியாத வலி ஏற்பட்டு துடிதுடித்துப் போவார்கள். முன்பு, இதற்குச் சிகிச்சையளிக்க தோள்மூட்டின் உட்பகுதியை அறுத்து கல்சியத்தை எடுப்பார்கள். இதனால் இவர்கள் மருத்துவமனையில் பல நாட்கள் தங்க வேண்டியதிருக்கும்.

இப்போது கீஹோல் சர்ஜரி மூலம் கல்சியத்தை மட்டும் சுலபமாக எடுத்து விட முடிகிறது. எலும்பும் விரைவாகக் குணமாகி விடுகின்றது. இந்த கிசிச்சை முறையில் உள்ள இன்னொரு அனுகூலம் மறுபடி கல்சியம் சேர்ந்து தோள்மூட்டுவலி வரவாய்ப்பு இல்லை என்பதுதான்.

தோள்மூட்டில் என்ன பிரச்சினை, எப்போது முதல் வலி வருகிறது, எந்தப் பகுதியில் வலி வேதனை, பாதிப்பு அதிகம் என்பதை முழுமையாக அறிந்த பின்னரே கீஹோல் சர்ஜரி அளிக்கப்படுகிறது. இதில் இன்.பெக்ஷன் ஏற்படுவதில்லை. தையல் கிடையாது என்பதால் விரைவிலேயே ஆறிவிடும். இரத்த இழப்பும் இல்லை.

அமெரிக்கா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா முதலிய நாடுகளில் இந்த அதிநவீன கீஹோல் சர்ஜரி பிரபலமாக உள்ளது.

### வேறு பாதிப்புக்கள்

சிலருக்குத் தோள் மூட்டில் வேறுவிதமான பாதிப்புக்கள் ஏற்படும். அவற்றில் வாதம் குறிப்பிடத்தக்கது.

வாதம் ஏற்பட்டு தோள்மூட்டு மூட்டுப்பாதிக்கப்பட்டவர்களும், மூட்டு பழுதடைந்தவர்களும் செயற்கைத் தோள்மூட்டு மூட்டு மாற்று அறுவைச் சிகிச்சை பெற்று முழுமையாக இயல்பு நிலையை அடையலாம்.

இதற்கு இரண்டுவிதமான நவீன அறுவை சிகிச்சைகள் உண்டு.

'ரீ சர்பேசிங்' என்னும் முறையையும் பயன்படுத்தலாம். இது பந்து கிண்ண மூட்டை அகற்றாமல் செய்யக்கூடிய அறுவை சிகிச்சை.

இரண்டாவது சிகிச்சை, முழுவதுமாக பந்துகிண்ண மூட்டு எலும்பை அகற்றிவிட்டு செய்வதாகும்.

இவ்விரண்டு சிகிச்சைகளிலும் மயக்க மருந்து கொடுத்து தோலை அறுத்து செய்யப்படும் முறை பின்பற்றப்படுகின்றது. எனவே 5,6 நாட்கள் வரை மருத்துவமனையில் பாதிக்கப்பட்டவர் தங்கி சிகிச்சை எடுக்கவேண்டியிருக்கும்.

இதேபோன்று தோள்மூட்டில் மூட்டு எலும்பு முறிவு மிகுந்த வேதனை தருவதாகும். மற்ற இடங்களில் முறிவு ஏற்பட்டால் பிளேட், ஸ்க்ரூ வைத்து சரிசெய்து விடலாம். ஆனால் தோள் மூட்டு மூட்டுஎலும்பு முறிவுக்கு இவ்வாறு செய்ய இயலாது. ஏனெனில் ரத்த ஓட்டத்தில் தடை ஏற்பட்டு மூட்டுக்கு இயக்கம் கிடைக்காமல் போய்விடும்.

**டாக்டர் விஜய்.சி.போஸ்**

தோள்மூட்டு மூட்டு எலும்பு முறிவை நவீன கருவிகளின் உதவியுடன் மிகச் சுலபமாக குணப்படுத்திவிடலாம். இக்கருவிகள் மூலம் சிறுதுவாரங்கள் போட்டுத் தோள் மூட்டு மூட்டு எலும்புகளைப் பார்த்துவிட முடியும். பிறகு பூட்டு முறை சிகிச்சையளித்தால் முறிந்த எலும்புகள் தானாக கூடிவிடும்.

எலும்பு மெல்ல வளர்ச்சியடைந்து முறிந்த இடத்தில் வளர்ந்து ஒன்று சேர்ந்துவிடும்.

அதன்பின் தசைக்கும், எலும்பிற்குமான ரத்த ஓட்டம் சீரடைந்து தோள்மூட்டுக்கு உடனடியாக அசைவு கிடைக்கின்றது. இதன் பின் இவர்களுக்கு தசை இறுக்கமும் வராது.



சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் நடைபெற்ற கருத்தரங்கை மருத்துவக் கல்வி இயக்குநர் விஜயலட்சுமி துவக்கிவைத்தார்.

# திருப்பதியில் தீ விபத்து 62 குடிசைகள் சாம்பல்

திருப்பதியிலுள்ள சித்தூர் மாவட்டம் புருஜுபள்ளி என்ற கிராமத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்ட தீ விபத்தில் 62 குடிசைகள் எரிந்து சாம்பலாயின.

அக் கிராமத்தில் குடிசைப் பகுதியில் இருந்த ஒரு வீட்டில் மின் கசிவு காரணமாக ஏற்பட்ட தீ மளமளவென்று அருகில் இருந்த குடிசைகளுக்கும் பரவியது.

அதனால் அப் பகுதியில் 62 குடிசைகள் தீக்கிரையாகின. அதில் 53 குடிசைகள் முற்றாக எரிந்து சாம்பலாகின. அத்துடன், 6 ஆடுகளும் தீயில் கருகி உயிரிழந்தன.

இத் தீ விபத்தில் இரண்டு இலட்சம் ரூபா மதிப்புள்ள பொருட்கள் சேதமடைந்திருக்குமென மதிப்பிடப்படுகிறது.

வீடுகளை இழந்தவர்களுக்கு உடனடி நிவாரணமாக ஆயிரத்து 500 ரூபாவும் 10கிலோ அரியும் வழங்கப்பட்டுள்ளன. (து)

# நாடு முழுவதிலும் நதிகளை இணைக்கும் திட்டம்

## பா.ஜ.க. பூர்த்தி செய்யுமென அறிவிப்பு

நாடு முழுவதுமாக நதிகளை இணைக்கும் மாபெரும் பணியை தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யும்; பின்னர் ஒவ்வொரு கிராமத்துக்கும் தண்ணீர் கிடைக்கும், தண்ணீர் தட்டுப்பாடு என்ற பேச்சுக்கே இடமிருக்காது என்று துணைப் பிரதமர் எல்.கே.அத்வானி கூறியிருக்கிறார்.

கர்நாடகத்தில் நீலமங்களா என்னும் இடத்தில் "பாரத் உதய" யாத்திரையின் மூன்றாவது தினத்தில் பேரணி ஒன்றில் அவர் உரையாற்றினார்.

45 ஆண்டுகாலம் நாட்டை ஆண்ட காங்கிரஸ் விவசாயிகளுக்குத் தண்ணீர் கிடைப்பதை உறுதி செய்யத் தவறிவிட்டது என்று அத்வானி குற்றம் சாட்டினார்.

கிராம மக்களின் நிலையை மேம்படுத்த தமது கட்சி மேற்கொண்ட பல்வேறு திட்டங்களையும் அவர் எடுத்துக் கூறினார்.

கர்நாடகத்தின் சட்டப் பேரவைத் தேர்தலிலும் பா.ஜ.கவுக்கு வாக்களித்து ஆட்சிக்கு வர உதவும்படி மக்களைக் கேட்டுக் கொண்டார்.

முன்னதாகப் பெங்களூரில் செய்தியாளர்களிடம் பேசிய அத்வானி, பெங்களூர் கூட்டத்தில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டது தேசிய ஜனநாயகக் கூட்டணியைப் பாராட்டும் வகையில் அமைந்துள்ளதாகவும் கர்நாடகத்தில் காங்கிரஸ் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வர மக்கள் கொண்டிருக்கும் ஆர்வத்தையும் காட்டுவதாகவும் அத்வானி கூறினார். (து)

## இந்தியச் செய்திகள்

# காங்கிரஸுக்கு இ.யூ. முஸ்லிம் லீக் ஆதரவு

(சென்னை)

நாட்டில் வகுப்பு ஒற்றுமையையும் தேசிய ஒருமைப்பாட்டையும் சுட்டிக்காட்டக்கூடிய மதச் சார்பற்ற அரசே மத்தியில் அமையவேண்டும்.காங்கிரஸ் தலைமையில் ஐக்கிய கூட்டணி அரசு மத்தியில் அமையுமானால் அதில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் பங்கு கொள்ளும் என்று அதன் தமிழ் நாடு பிரிவுத் தலைவர் காதர் முகைதீன் கூறியிருக்கிறார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழ் நாட்டில் தி.மு.கவுடன் தமது கட்சி கூட்டணி அமைத்திருப்பது இயல்பானது என்றார். (து)



ஹோலிப் பண்டிகையைப் போன்ற 'ரங்ப சமி' என்ற பண்டிகை வட இந்தியாவில் அண்மையில் கொண்டாடப்பட்டது. போபாலில் வண்ணப் பொடிகள் கலந்த நீரை ஒருவர் மீது ஒருவர் ஊற்றிக் கொண்டாடும் காட்சி.

செய்வானை நாடி வினை நாடிக் காலத்தோடு
எய்த உணர்ந்து செயல். -குறள்

வலம்புரி

## ஜனாதிபதியின் உரையில் திருத்தம் தெரியவில்லை

மனவேதனையுடனேயே பாராளுமன்றத்தைக் கலைத்ததாக நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியுள்ளார்.

ஐக்கியதேசிய முன்னணி அரசில் நிலவிய ஊழல் காரணமாகவே தான் அந்த முடிவை எடுத்ததாகக் கூறிய ஜனாதிபதி, ஐக்கியதேசிய முன்னணியின் ஆட்சியில், விடுதலைப் புலிகள் தம்மை ஸ்திரப்படுத்தியதுடன், கப்பல்கள்மூலம் ஆயுதங்களைப் பெற்றுக்கொண்டதாகவும் குற்றம்சாட்டியுள்ளார்.

பாராளுமன்றத்தைக் கலைத்து, பொதுத்தேர்தலுக்கு உத்தரவிட்ட ஜனாதிபதி, தேர்தல் பிரசாரங்கள் முமமுரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளையில் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையிலிருந்து அவரின் குழம்பிய நிலை வெளிப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தலுக்கு உத்தரவிட்டுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது கட்சியின் தேர்தல் பிரசாரங்களின்போது ஓர் உண்மையைப் புரிந்துகொண்டார்.

அதாவது, பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தல் நடத்தப்படுவதை நாட்டுமக்கள் விரும்பவில்லை என்பதே அவ்வுண்மையாகும்.

தேர்தலில் நாட்டுமக்கள் காட்டும் வெறுப்பு பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஏற்கனவே பாராளுமன்றத்தில் இருந்த ஆசனங்களையும் பறித்துவிடும் என்ற பயம் ஜனாதிபதிக்குத் தொற்றிவிட அவர் அவசர அவசரமாக நாட்டுமக்களுக்கு உரையாற்றி, வேதனையுடனேயே தான் பாராளுமன்றத்தைக் கலைத்தாகக் கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தைக் கலைப்பதில் தனக்கு உடன்பாடில்லை, ஆனால் ஐக்கிய தேசிய முன்னணி அரசின் ஊழல் காரணமாகவே பாராளுமன்றத்தைக் கலைக்கவேண்டிய தேவை ஏற்பட்டதாகக் கூறியுள்ளார்.

ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்ந்த ஜனாதிபதி, கடந்த காலத் தேர்தலில் ஜே.வி.பிக்கும், பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் கிடைத்த வாக்குகளைக் கூட்டிப்பார்த்துவிட்டு தேர்தலை நடத்தினால் தமது கூட்டணி ஆட்சியமைக்கும் வாய்ப்பு ஏற்படும் எனக் கணக்குப்போட்டார்.

அதன் காரணமாகவே, ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்த கையோடு பாராளுமன்றத்தைக் கலைத்தார். தேர்தலுக்கான திகதியையும் அறிவித்தார்.

எனினும், நாட்டு மக்களின் நாடியைப் பிடித்துப் பார்த்தபோதே பாராளுமன்றக் கலைப்பினால் மக்கள் மத்தியில் நிலவும் வெறுப்பும், விசனமும் தெரிய வந்தது.

இரண்டுவருடகால இடைவெளிக்குள் பாராளுமன்றத்தைக் கலைத்துத் தேர்தலை நடத்துவதன் மூலம் நாட்டின் பொருளாதாரம் வீணடிக்கப்படுவதை நாட்டுமக்கள் அறவே விரும்பவில்லை. இதனைப் புரிந்துகொண்ட ஜனாதிபதி, ஊழல் என்ற குற்றச்சாட்டை முன்னிறுத்தி பாராளுமன்றக் கலைப்பை நியாயப்படுத்த முனைந்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான ஐக்கியதேசிய முன்னணி அரசு, விடுதலைப் புலிகளுடன் உடன்படிக்கையைச் செய்துகொண்டு யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடித்தாலும், இக்காலப் பகுதிக்குள் விடுதலைப் புலிகள் தம்மைப் பலப்படுத்தியதுடன், கப்பல்கள்மூலம் பெருமளவு ஆயுதங்களையும் கொண்டுவந்து சேர்த்துள்ளனர் எனக் கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் மேற்போந்த உரையில் இருந்து அவர் ஓர் உண்மையை ஏற்றுக்கொண்டுள்ளார். அதாவது, விடுதலைப் புலிகள் இப்போது மிகப் பெரும்பலத்துடன் இருக்கிறார்கள் என்பதே அதுவாகும்.

தான்விட்ட தவறை நிவர்த்திப்பதற்காக நாட்டு மக்களுக்கு உரையாற்றிய ஜனாதிபதி, ஓர் முக்கிய விடயத்தை மறைந்துபோனமை, அவரின் உரையை உற்றுக்கேட்ட மக்களுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது.

விடுதலைப் புலிகள் அவ்வப்போது நடத்திய தாக்குதலின்போது இலங்கை அரசாங்கங்களினால் அவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட ஆயுதங்களைக் கூற ஜனாதிபதி மறந்துவிட்டார். குறிப்பாக ஜனாதிபதியின் தலைமையிலான பொதுஜன ஐக்கியமுன்னணியின் ஆட்சியில், விடுதலைப் புலிகள் இராணுவ முகாம்கள் மீது நடத்திய தாக்குதல்கள், அங்கிருந்து பெற்றுக்கொண்ட ஆயுதங்கள் பற்றியெல்லாம் ஜனாதிபதி கூறியிருந்தால், அவரின் உரையின் உண்மைத் தன்மையைப் பலரும பாராட்டியிருப்பர்.

# இலங்கையின் பொருளாதாரம் குறித்து சர்வதேச நாணய நிதியம் கவலை

(கொழும்பு)

இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமைகள் குறித்து சர்வதேச நாணய நிதியம் கவலை வெளியிட்டுள்ளது.

இவ்வாண்டு இலங்கையின் பொருளாதாரம் 6 சதவீதத்தினால் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும், திடீர்ப் பாராளுமன்றக் கலைப்பு, அரசியல் குழப்பநிலைகள் மற்றும் சமாதான நடவடிக்கைகளில் பின்னடைவு போன்ற காரணங்களால் இலங்கையின் பொருளாதாரத்துறை பெரிதும் பின்னடைவைச் சந்திக்கவுள்ளது.

அத்துடன், அண்மைக்கால அரசியல் குழப்ப நிலைமைகளினால் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் நிதியுதவி உட்பட ஏனைய வருமானங்கள் மற்றும் முதலீடுகள், உல்லாசப் பிரயாணத்துறை ஆகியவற்றில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதுடன், பொருளாதாரமும் பாரிய வீழ்ச்சி கண்டுள்ளது என சர்வதேச நாணய நிதியம் கவலை தெரிவித்துள்ளது.

அத்துடன், அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒபபந்தம் செய்துகொள்ளப்பட்டதன் பின்னர், இலங்கையின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்து வந்தது. ஆயினும், தென்னிலஙகை அரசியல் கட்சிகளுக்கு இடையில் நிலவிவந்த முரண்பாடுகளால் நாட்டில குழப்பநிலை உருவாகியுள்ளதுடன், விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகளும் தடைப்பட்டுள்ளன.

மேற்படி காரணங்களால் வீழ்ச்சி கண்டுள்ள பொருளாதாரம், பொதுத் தேர்தலின் பின்னரான சுமுகமான நிலை மற்றும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் 'என்பன மீளவும் ஆரம்பிக்கப்படும் வேளை, அவை துரித வளர்ச்சியடையும் எனவும் சர்வதேச நாணய நிதியம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

(தி-18)

# புலிகளின் முரண்பாடுகளால் பிரதமர் ரணில் திணறுகிறார்

## ஜே. வி. பி. அறிக்கை

(கொழும்பு)

நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதாக கூறிக்கொண்டு விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளித்து, அவர்களின் பலத்தை வலுவூட்டிவந்த ஐக்கிய தேசிய முன்னணி, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரனுக்கும் கருணாவுக்கும் இடையில் நிலவிவரும் கருத்து முரண்பாடுகளால் தத்தளித்துக்கொண்டு இருக்கின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தெரிவித்து வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின உதவியுடன் அரசாங்கத்தை அமைக்க முடியுமென்ற ஐக்கிய தேசிய முனனணியின் மனக்கோட்டையும் பிரபா-கருணாவுக்கிடையிலான சாச்சை மூலம் தகர்க்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது, கடந்த இரு வருடங்களில் மக்களின் அபிலாஷைகளுக்கு முரணாகச் செயற்பட்டு நாட்டை அழிவுப் பாதைக்கு இட்டுச் சென்ற ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம், சமாதானத்தை மலரச் செய்வதாக. சாவதேச நாடுகளுக்கு நாடகமாடி நிதியுதவிகளைப் பெற்று சொகுசாக வாழ்ந்து வந்தது.

அதுமட்டுமன்றி, விடுதலைப் புலிகளுக்கும் நிதியைப் பகிர்ந்து கொடுத்து அவர்களையும் வளர்த்து வந்தது.

இது ஒருபுறமிருக்க, எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி படுதோல்வியடையும் என உறுதியாக அறிந்துள்ள அதன் தலைவர்கள், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர்களுக்கு எதிராக சதி முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

அதுமட்டுமன்றி, மக்களை அச்சுறுத்தி வாக்குகளை கொள்ளையிடவும் ஐக்கிய தேசிய முன்னணி திடடமிட்டு வருகின்றது.

ஆனாலும்,கள்ள வாக்குகள் மூலம் ஆட்சிக் கதிரையேற வேண்டும் என்ற ஐக்கிய தேசிய முன்னணியின் ஆசைக்கு ஆப்பு வைப்பதில் சர்வதேச நாடுகளின தேர்தல் கண்காணிப்பாளர்கள் மிகுந்த அக்கறையுடன் இருக்கின்றார்கள் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(தி-10)

## ஓய்வு பெற்ற நீதிபதியின் பெயர் ஆணையாளர் பதவிக்கு சிபார்சு

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் ஆணைககுழுவின் ஆணையாளராக ஓய்வு பெற்ற மேன்முறையீட்டு நீதிபதி கே.விக்னராஜாவின் பெயர் முன்மொழியப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக வெற்றிடமாகவுள்ள இலஞ்ச ஊழல் ஆணைககுழுவின் ஆணையாளர் பதவி இதன்மூலம நிரப்பப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, அண்மையில் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவினால் பிரேரிக்கப்பட்ட விக்னராஜாவின் பெயரை ஏற்றுக்கொண்ட சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா. இது தொடாபாக எவராவது தமது ஆட்சேபனைகளைத் தெரிவிக்க விரும்பினால், இன்னும் 14 நாட்களுக்குள் அதனைத் தெரிவிக்க வேண்டும் என அறிவித்துள்ளார்.

இதற்கிடையில் கடந்த ९ மாதங்களுக்கு முன்னா் இலஞ்ச ஊழல் ஆணைககுழுவின் ஆணையாளர் பதவிக்கு கே.விக்னராஜாவின் பெயரை பிரேரித்தபோது அதில் சில சிக்கல்க்ள் உள்ளதாகக் கூறி பிரதமர் ஏற்றுக்கொள்ள பின்னடித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(தி-60,10)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தேர்தல் ஆணையாளர் சந்திப்பு

(கொழும்பு)

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்காவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேடபாளா் நேற்று கொழும்பில் சந்தித்துப் பேசியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வாழும் வாக்காளர்கள் சுதந்திரமாக வாக்களிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து இச்சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன், தேர்தல் காலப் பிரசாரங்களின் போது ஏற்படும் வன்முறைகள் அசம்பாவிதங்களை கட்டுப்படுத்துவது குறித்தும் இங்கு ஆராயப்பட்டது.

(தி-60,10)

## இளைஞன் பலி

(மருதங்கேணி)

கட்டுத்துவக்கு தவறுதலாக வெடித்ததில் இளைஞர் ஒருவர் பரிதாபகரமாகப் பலியாகியுள்ளார்

வவுனியாவில் அண்மையில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த எம். பிறேமசிறி (வயது-28) என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, மிருகங்களை வேட்டையாடுவதற்காக தினமும் கட்டுத்துவக்கில் பொறியினை அமைத்துவரும் பிரஸ்தாப இளைஞன் சம்பவ தினத்தன்றும் கட்டுத்துவக்கு பொறியினை அமைத்தவேளை அது தவறுதலாக வெடித்ததிலேயே அவர் பலியாகியுள்ளார்.

(தி-35)

## தினசரி தியானம்

### ॐ விவேகச் சிந்தனைகள்

நீ வரம்பில்லா வலிமை பெற்றவன். உனது உண்மை இயல்போடு ஒப்பிடும்போது காலமும இடமும் கூட ஒரு பொருட்டல்ல. நீ எதையும் எல்லாவற்றையும் சாதிக்கக்கூடியவன். எல்லாம் வல்லவன் நீ.

சுவாமி விவேகானந்தர்.

## தவக்கால சிந்தனை-21

ஐம்பது ரூபாய் கடனுக்காக கழுத்தை வெட்டும் நிகழ்ச்சியும், கையகல நிலத்துக்கு மனிதனைத் துண்டாக்கும் பாதகமும் நம் மண்ணில் நிகழத்தான் செய்கின்றன. மனிதனின் உணர்ச்சி வேகம் அறிவை, அன்பை, தோழமையை மறைக்கின்றது. பொறுமை, மன்னிப்பு சிறிது சிறிதாக மறைகிறது. சிலமுறை மன்னிப்பதாகக் காட்டிக் கொள்கின்றோம். ஆனால், நேரம் பார்த்து வஞ்சம் தீர்த்துக் கொள்கின்றோம். மன்னிப்பு எண்ணிக்கையளவில் இல்லை. மனதளவைப பொறுத்தது. நாம் மன்னிப்பு பெற விரும்புவதை விட மன்னிக்க விரும்புவதில்லை. கடவுள் மன்னிபபதால், மன்னித்துக் கொண்டேயிருப்பதால்,நாம் உயிரோடு இருக்கிறோம். கடவுள் வஞ்சம் தீர்க்க விரும்பினால் நீயும் நானும் தூசு போல் ஆகிவிடுவோம். மன்னிப்பு பெற விரும்புவது போல் பிறரை மன்னிக்கவும் விரும்புவோம்.

காவலன்

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட் களுக்கும் பார்சல் சேவைகளுக்கும்
MANOJ EXPRESS SERVICE
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
இல.13, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
யாழ்: 021 222 3916, 0777 801038
கொழும்பு: T.P: 2396128 Fax: 2399650 Mob: 0777 517019

# முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கத்தின் ஆதரவாளர்கள் கைது

(திருநெல்வேலி)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட வேட்பாளருமான எம்.கே.சிவாஜிலிங்கத்தின் ஆதரவாளர்கள் நான்கு பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மருதானையில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டு மகஸீன் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை நாளைய தினத்திற்குள் விடுதலை செய்யாவிடில் ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார். (ச-43)

## மருத்துவர்களின் போராட்டம் 5வது நாளாகத் தொடர்கிறது

(யாழ்ப்பாணம்)

மருத்துவர் போராட்டம் நேற்று 5வது நாளாகவும் தொடர்கின்றது. சுகாதார அமைச்சுடனும், திறைசேரியுடனும் வைத்தியர் சங்கம் நடத்திய பேச்சுக்கள் வெற்றியளிக்காத நிலையில் போராட்டம் தொடர்கிறது.

வைத்தியர்களின் போராட்டம் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு மற்றும் கிளினிக் என்பன முற்றாக இயங்கவில்லை.

அவசர சிகிச்சைப் பிரிவு வைத்திய விடுதிகள் என்பவற்றில் மட்டும் வைத்தியர்கள் தமது கடமையில் ஈடுபட்டனர்.

இதனால், வெளிநோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிட்டதை அவதானிக்க முடிந்தது. (த-3)

## புவியியல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலயத்திருக்குட்பட்ட, பாடசாலைகளில் 2004, 2005 ஆண்டுகளில் புவியியல் கற்கும் மாணவர்களுக்கும், புவியியல் பாட ஆசிரியர்களுக்குமான கருத்தரங்கு ஒன்று நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ்.மத்திய கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் காலை 9 மணிமுதல் பிற்பகல் 2.30 மணி வரை இக்கருத்தரங்கு நடைபெறும். (ந)

## காவலரண்கள் அமைப்பு

தென்மராட்சியின் பல பகுதிகளிலும் படையினர் கடந்த சில நாட்களாக புதிய காவலரண்களை நிறுவிவருகின்றனர்.

கைதடி, நுணாவில், மட்டுவில் கனகம்புளியடி, மீசாலை, சங்கத்தானை ஆகிய இடங்களிலேயே மேற்படி காவலரண்கள் அமைக்கும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

படையினரின் இவ்வாறான நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் பீதியை உருவாக்கியுள்ளது. (த-112)

## தலைமறைவான...

காவல் கடமையிலிருந்த பிரஸ்தாப சிப்பாய் நள்ளிரவு வேளையில் காவலரணுக்குள் உறங்கியதை அவதானித்த படை அதிகாரி, வாளி ஒன்றில் இருந்த நீரை எடுத்து அவர் மீது ஊற்றினார். இதனால் ஆத்திரமடைந்த பிரஸ்தாப சிப்பாய் அந்த அதிகாரியைச் சுடமுயன்றார். இதனைத் தடுக்கமுற்பட்ட சிப்பாய் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்.

இதனையடுத்து பிரஸ்தாப சிப்பாய் தலைமறைவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## ஜனாதிபதி...

முடித்துக்கொண்டு நோர்வேத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இன்று நாடு திரும்புகின்றார். (ச)

## கருணாவின் சதிக்கு...

மீது அவருக்கு மிகவும் உயர்ந்த நம்பிக்கையும், விசுவாசமும் இருந்தது. கருணாவைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும் என்று தலைவர் எம்மிடம் கூறிவந்துள்ளார். இருப்பினும், கருணாவின் சுயநல சுயலாபப் பிரச்சினை வெளிக்கிளம்பியதும், தேசியத் தலைவர் உண்மையாக அசந்துபோய்விட்டார்.

கருணா செய்த துரோகத்திற்கு எமது தேசியத் தலைவர் பொது மன்னிப்பு வழங்கியுள்ளார். அவரது உயிருக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டு அவா விரும்பும் நாட்டில் தஞ்சம்பெறத் தலைவர் ஆவன செய்வதாகவும், உறுதியளித்துள்ளார். ஆயினும்கூட அவர் இப்போது எல்லாவற்றையும் புறந்தள்ளிவிட்டு வெளிநாட்டுச் சக்திகளிடம விலைபோய்விட்டார்.

இலங்கை இராணுவம் இப்போது அவருக்குப் பாதுகாப்பு அளித்து வருகின்றது. போராளிகள் மற்றும் தளபதிகளுடன் மிகவும் விரும்பத்தகாத முறையில் இப்போது நடந்துகொள்கின்றார் என அங்கிருந்துவரும் தகவல்கள் மூலம் தெரிய வருகின்றது.

இன்று அவரது செயற்பாடுகள் யாவும் பிழையான வழிகளிலேயே போய்க்கொண்டிருக்கின்றது. இவரால் மட்டு-அம்பாறை மாவட்ட மக்களின் சுதந்திர உணர்வையும், விடுதலை வேட்கையையும் ஆற்றுப்படுத்த முடியாது.

பேச்சுவார்த்தைக்குப் போய் வந்த காலங்களில் எல்லாம் வெளிநாடுகளில் வாழ்ந்து வருகின்ற யாழ்ப்பாண - மட்டக்களப்புப் பிரதேசங்களின் கல்விமான்கள், புத்திஜீவிகள் மற்றும் விடுதலை ஆர்வலர்களைச் சந்தித்துப் பேசியுள்ளார். அதன்மூலம் பிரதேசவாதக் கருத்துக்கு தூபம்போட முனைந்ததன் அறுவடைதான் இப்போதைய நிலை. இந்நிலை நீண்ட காலத்திற்கு நீடிக்கமாட்டாது. எமது தேசியத் தலைவர் மதிநுட்பமான வியூகங்களை அமைத்து காய்களை நகர்த்துவதில் திறமையானவர்.

அவ்வகையில், கருணா என்ற தனிமனிதனின் பிரச்சினை தமிழ்த் தேசியத்தை பிரதேசவாதம் என்ற பெயரில் கூறுபோடவும், ஒற்றுமையைச் சிதறடிக்கவும் இடமளிக்க மாட்டோம் என்பது மட்டும் உறுதியாகும்.

மட்டு-அம்பாறை மாவட்ட மக்கள் எப்போதும் தேசியத் தலைவருக்கு எதிராகச் செயற்படவும் செல்லவும் தயாராகவில்லை. கருணாவின் பிரச்சினைக்கு வெகுவிரைவில் நாம் தீர்வினைக் காண்போம். எமது தேசியத் தலைவரின் காலத்திலேயே நாம் விடுதலையைப் பெறுவோம். இன்று கிழக்கில் தோன்றியுள்ள பிரச்சினைகள் குறித்து யாழ்ப்பாண மாவட்ட மக்களும், பல்கலைக் கழக சமூகமும் கலக்கமடையவேண்டிய அவசியம் இல்லை. எமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் பிரதேசவாதம் குறுக்கிட இடமளிக்க முடியாது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் கிழக்கு மாகாண மக்களும், தளபதிகளும், போராளிகளும் கணிசமான அளவு பங்களிப்பைச் செய்துள்ளனர் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். இது வரலாற்று உண்மைகளைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்துவார் கருணா என நாம் கனவிலும் நினைக்கவில்லை. ஒவ்வொரு போராளியும் தேசியத் தலைவரையும், விடுதலைப் போராட்டத்தையும் தம் இதயங்களில் சுமந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

இதுவரை எமது தேசியத் தலைவரைப் பார்க்காத போராளிகள் கூட அவரின் புகைப்படத்தை வைத்துக்கொண்டு வீரச்சாவடைந்துள்ளனர். அத்தகைய விசுவாசம் கொண்டுள்ள மட்டு. அம்பாறைப் போராளிகளிடம் விடுதலை இயக்கம் பற்றியும், தலைமை பற்றியும் தவறான, பொய்யான, நேர்மைக்கு விரோதமான குற்றச்சாட்டுக்களைக் கருணாவினால் சுலபமாக ஏற்படுத்திவிட முடியாது என்பது உண்மையாகும் என்றார்.

மட்டு. அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் அங்கு உரையாற்றுகையில்,

திட்டமிட்ட எமது அரசியல் போராட்டத்தினைத் திசைதிருப்பி எமது தேசியத் தலைமைக்குப் பெருங்களங்கத்தினை ஏற்படுத் தும் முயற்சியில் கருணா இறங்கியுள்ளார் என தேசியத் தலைவரால் எமக்கு ஊட்டப்பட்ட விடுதலை உணர்வையும், சுதந்திர உணர்வையும் எந்தவொரு அந்நிய சக்தியாலும் மழுங்கடித்துவிட முடியாது

தமிழ் மக்களின் அரசியல் வாழ்வு இப்படியான துரோகத்தனங்களும், பிரதேச வாதங்களும் காலத்திற்குக் காலம் முளைவிட்டே வந்துள்ளன. இவ்வளவு காலமும் எமக்குள் சிங்களப் பேரினவாதிகளும், வெளிநாட்டுச் சக்திகளும் இத்தகைய நடவடிக்கைகளைச் செய்துவந்துள்ளன. ஆனால், இன்றோ எமக்குள் இருக்கும் ஒருவரே செய்துவிட்டார் என்பதுதான் எமக்கு ஏற்பட்டுள்ள பெருங்கவலையாகும்.

இத்தகைய நிலை நீடிக்க இனியும் நாம் அனுமதிக்கமாட்டோம். அதன் புனிதத் தன்மையை விரைவில் நிலைநாட்டுவோம் எனத் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் தலைவர் கே.பகீரதன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில், புலிகளின் குரல் பொறுப்பாளர் ஜவான், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி, சர்வதேச மாணவர் பேரவையின் தலைவர் கண்ணன் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களின் மாணவர்கள், விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக ஊழியர்கள், பொதுமக்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர். (ச-16,19)

பதவி வெற்றிடம்
கணனி பக்க அமைப்பாளர்கள்
அனுபவம் உள்ள ஆண் பெண் இருபாலாரும்.
விளம்பர முகவர்
நிறுவனத்தில் இணைந்து வெளிக்களத்தில் பணியாற்றுதல்
வயது 25 முதல் 50 வரை
தகுதியானவர்கள் சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் 18.03.2004 அன்று பிற்பகல் 3.30 மணிக்கு நேரில் வரவும்.
வலம்புரி.
15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்.
நிர்வாக உத்தியோகத்தர்

Praba's Institute of Beauty Theraphy

நிறுவனத்தின் யாழ். மண் மாணவர்களுக்கான மேலதிக ஒரு நாள் பயிற்சி வகுப்புக்கள்.
காலம்:- 17.03.2004 (புதன்கிழமை)
நேரம்:- மு.ப. 10.00 மணி
இடம்:- நாவலர் கலாசார மண்டபம்
ஏற்கனவே இப்பயிற்சி வகுப்பில் பங்குபற்றிய மாணவர்கள் அனைவரும் இவ்வகுப்பிற்கு சமுகந்தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
நிர்வாகத்தினர்.
(C/7389)




இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.03.2004 -இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.